கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

செய்திகள்

கம்பர் விழா

காரைக்குடியில் கம்பர் கழகத்தின் ஆதரவில் கவிச் சக்கர கம்பனுடைய திருநாளை நாலு நாட்கள் விமரிசையாகக் கொண்டா கள். இந்திய அரசாங்க நிதிக் கமிஷன் தலைவர் ஸ்ரீ க. சந் தலைமை வகித்தார். நாட்டின் பல பாகங்களிலிருந்து தமிழ் களும் பொதுமக்களும் திரளாகக் கூடியிருந்தார்கள். இரண்டாம் கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையி கவியரங்கமும் நடைபெற்றது.

புதிய கல்விமுறை

சென்னை ராஜ்யம் முழுதுக்கும் ஒரே சீரான கல்வி அமை கும் பள்ளிக்கூட வருஷத்தில் தொடங்கும் என்று தெரிகிறது. பள்ளிப் படிப்பு ஏழு வருஷமும் உயர்தரப் பள்ளிப் படிப்பு நா மும் இருக்கும் என்று கூறப்படுகிறது. சட்டசபையில் அங்கிகா தும் இது சட்டமாக அமுலுக்கு வரக்கூடும்.

நேருஜி அமெரிக்கா செல்வார்

இந்தியப் பிரதமர் நேருஜி ஜூன் இறுதியில் இங்கிலாந்தில் விருக்கும் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்கு செய்யவிருக்கிறார். அங்கிருந்து அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவ அவர்களின் அழைப்பிற்கு இணங்க அந்த நாட்டிற்கும் விஜயம் செய்வார்.

சூரியனை விட உஷ்ணமான அலைகள்

மணிக்கு 18,000 மைல் வேகத்தில் செல்லும் அதிர்ச்சி அலைகளை வெளியிடும் சாதனத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இந்த அலைகள் சூரியனைப் போல் 1½ மடங்கு அதிகம் உஷ்ணம் உள்ளவை. இவை ஒலியின் வேகத்தைப் போல 25 மடங்கு அதிக வேகமாகச் செல்கின்றன.

சூரியனில் பிரம்மாண்ட 'வெடி'

சென்ற மாதம் சூரியன் 100 கோடி டன் வாயுவை வெளியே வீசிய தாம். இது 100 கோடி ஹைட்ரஜன் குண்டுகள் வெடித்ததற்குச் சமம் என மதிக்கப்படுகிறது. பூமியின் ஆகர்ஷண சக்தியைப் போல 1000 மடங்குள்ள சக்தியே இந்த வாயுவை வெளியே தள்ளியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. இதிலிருந்து வெளிப்பட்ட வயலட் கிரணங்கள் ரேடியோ அலைகளைப் பாதித்தனவாம்.

கோட்டைக்குள் கோயில்

வட ஆர்க்காடு ஜில்லா வேலூர் கோட்டைக்குள் சிறந்த சிற் வேலைப்பாடுகளுடன் நிறைந்த கோயில் ஒன்று இருக்கிறது. சுமார் இரு நூறு ஆண்டுகளாக பூஜை இல்லாமலிருக்கும் இந்த ஜலகண்டேசுவரர் ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்ய நகரமக்கள் தீர்மானித்துள்ளனர்

குழந்தைகள் சீர்திருத்தம்

சென்னை, குழந்தைகள் பாதுகாப்புச் சங்கத்தின் 48-ஆவ சபைக் கூட்டம் விவசாய அமைச்சர் தலைமையில் கூடியது. ஸ் தைச் சேர்ந்த குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சி ஒன்றும் இறுதியி பெற்றது. சமூகக் குறைபாடுள்ள குழந்தைகளும் அநாதைக் களும் இங்கே பராமரிக்கப்படுகிறார்கள்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 7

1-4-'56

குழந்தைகளே!	பக்கம்	2
புலிக்குட்டி	..	3
மஞ்சள் பங்களா	..	5
நவநீதன்	..	10
பேய் அடித்ததா?..	..	13
காணாத பேனா	..	18
கவியரங்கம்	..	21
ஸி. ஐ. டி: சிங்காரம்	..	22
மனித சுபாவம்	..	29
கோவூர் கிழார்	..	34
ரேடியோ விமரிசனம்	..	39
மணல் வீடு	..	40

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ணா

செய்திகள் - 2 - அட்டை.
பேனா நண்பர்கள் - 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அருமையான சம்பவம்

அன்று பள்ளிக்குக் கிளம்ப எப்படியோ நேரமாகி விட்டது. வீட்டுக் கடிகாரம் 'டாண் டாண்' என்று பத்து அடித்து ஓய்ந்தது. பள்ளிக்கு நடந்துபோக எப்படியும் கால்மணி நேரமாகிவிடும். முதல் பாடம் ஆங்கிலம். அந்த ஆங்கில ஆசிரியரிடம், கால்மணி நேரம் கழித்துப்போய் எப்படித் தப்பித்துக்கொள்வது? அவர் முகத்தை நினைக்கும்போதே பயங்கரமாக இருந்தது. ஓடாத குறையாய் வேகமாக நடந்தேன்.

மணிக் கூண்டுக்கு அருகில் வந்துகொண்டிருந்தேன். அப்பொழுதுதான் மணிக் கூண்டில் பத்து அடிக்க ஆரம்பித்தது. 'அடடே! வீட்டுக் கடிகாரம் ஐந்து நிமிஷம் வேகமாகப் போய் இருக்கிறது. எப்படியும் பத்து நிமிஷத்தில் பள்ளிக்குப் போய்விடலாம்' என்று இன்னும் வேகமாக நடந்தேன். கல்லூரிக்கு அருகில் போய்க்கொண்டிருக்கும் பொழுது கல்லூரி மணிக்கூண்டில் என்ன மணி என்று பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அதிலும் அப்பொழுது பத்து மணிதான்; சரிதான். மணிக் கூண்டும் வேகமாகத்தான் ஓடியிருக்கிறது. இன்னும் எப்படியும் ஐந்து நிமிஷத்தில் போய்ச் சேர்ந்துவிடலாம். ஐந்து நிமிஷ நேரத்திற்கு ஏதோ ஒரு சாக்குப்போக்குச் சொல்லிக் கொள்ளலாம் என்று கால் வலிக்க வேகமாக நடந்தேன். அப்பா! 'டாண், டாண்!' என்று மணி அடிக்கும் ஓசை கேட்டது. என்ன அதிசயம்! பள்ளி மணிதான் அடித்துக்கொண்டிருந்தார்கள். அப்படியானால் பள்ளிக்கூட மணியில் அப்பொழுதுதான் பத்துமணி ஆகியிருக்கிறது. 'அப்பாடா! ஒரு வழியாக ஆங்கில ஆசிரியரின் குரங்குப் பிடியிலிருந்து தப்பித்தேன்' என்று மகிழ்ந்துகொண்டே வகுப்பில் என் இடத்தில் அமர்ந்தேன். வேர்வைத் துளிகளை வழித்துக் கொண்டே, ''மணியான மணிகள்!'' என்று முணுமுணுத்தேன்.

—வ. கேசவன், சேலம்.

குழந்தைகளே!

மன்மத ஆண்டு முடிந்துவிட்டது.

அடுத்த இதழ் புத்தாண்டு தினத்தன்று உங்கள் கையிலே திகழும்.

மன்மத ஆண்டு தமிழ் நாட்டை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. பெருமழையும் புயலும் வீசி, படுநாசத்தை உண்டாக்கிவிட்டது. கிழக்குக் கரை ஓரமாக, அதாவது வேதாரண்யத்துக்கு அருகே கடலே உள்ளே புகுந்து நூற்றுக்கணக்கான உயிர்ச் சேதங்களை உண்டாக்கிவிட்டது. ஐந்து ஜில்லாக்களில் எத்தனையோ ஏரிகள், ஆறுகள் உடைப்பு எடுத்து விட்டன. ஊர்கள் வெள்ளக் காட்டிலே மூழ்கிவிட்டன. எத்தனையோ உடைமைகள் நஷ்டம். பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு எல்லாம் இதனுல் எத்தனையோ தொல்லைகள் ஏற்பட்டன.

ஆயினும் கடவுள் அருளால், சர்க்கார் சமயத்துக்கு முன்வந்து உதவியளித்துக் காப்பாற்றினுர்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் பொருளாகவும பண்டமாகவும் அள்ளிக் கொடுத்து உதவினுர்கள். மன்மத ஆண்டு நம்மைச் சோதித்தது ஒரு பக்கம் இருக்கட்டும். கஷ்டமும் துயரமும் படுகிறவர்கள் யாராயினும் நம் உறவினர்களே என்று கருதும் நல்ல பண்பு நாட்டில் ஓங்கியிருப்பதை நாம் இதிலிருந்து தெரிந்துகொண்டோம். இந்த நல்ல பண்பு வருகிற துன்முகி வருஷத்திலே எல்லாச் சமயங்களிலும் ஓங்கித் தழைத்திருக்க வேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்வோம்.

புதிய வருஷ ஆரம்பத்திலே நாம் பல நல்ல காரியங்களைச் செய்ய முடிவு செய்துகொள்வோம். அதை ஒட்டி, கண்ணன் முற்றும் புதிய வழிகளில் தன் தொண்டைச் செய்துவருவான்.

தீமை செய்யும் பல பகுதிகளை - அவற்றை எவ்வளவு பேர் கேட்டாலும் - நீங்கள் கண்ணனில் எதிர்பார்க்க முடியாது. நீங்கள் மகிழ்ச்சியோடு வாங்கவேண்டும்; மற்றவர்கள் மதிப்போடு கொண்டாட வேண்டும். இதுவே கண்ணன் லட்சியம்.

வாழ்க்கையில் நம்பிக்கையூட்டும் சுவை மிக்க கற்பனைக் கதைகள்; மூளைக்குப் பயிற்சி தரும் அறிவுப் புதிர்கள்; உல்லாசம் தரும் ஹாஸ்யங்கள்; மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்குக் கதைகள், பாடல்கள், விளையாட்டுப் பகுதிகள், பெரியோர்களுடைய ரஸமான வரலாறுகள், விஞ்ஞானக் கதைகள், ஏன் துப்பறியும் கதைகள்கூட உண்டு - ஆனுல் அவற்றில் கொலை, கொள்ளை, சித்திரவதை, வஞ்சனை முதலியவற்றைக் காண முடியாது - எல்லாம் ஒவ்வோர் இதழிலும் நிறைந்திருக்கும்.

நீங்கள் இப்போது பரீட்சையில் மும்முரமாக இருப்பீர்கள். ஆகவே பாடத்தை முதலில் படியுங்கள். களைத்துப்போன சமயத்தில் கண்ணனைப் பார்ப்பது என்று இந்த மாதத்தைக் கழியுங்கள். வந்த சமயத்தில் கண்ணனை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டால், விடுமுறையில் சேர்த்து வைத்துப் படிக்கலாம்.

விடுமுறை என்று சொன்னதும்தான் ஞாபகம் வருகிறது. விடுமுறைக்கு உங்களுக்குப் பொழுது போகும்படியான நல்ல போட்டி ஒன்றுக்கு நான் ஏற்பாடு செய்யவேண்டுமே! ஆகவே இப்போதைக்கு நிறுத்திக் கொள்கிறேன்; அடுத்த இதழில் சந்திப்போம்.

ஆசிரியர்

கதை: ஆர்வி

புலிக் குட்டி

சித்திரம்: சுசி

(தொடரும்.)

முதல் பரிசுபெற்ற தொடர்கதை:



15

வாசற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டு ஹநுமந்த ராவ் விழித்துக் கொண்டார். ''யார் இந்த வேளையில் வரப் போகிறார்கள்?'' என்று யோசித்துக்கொண்டே கதவைத் திறந்த அவர், மனோகரையும் ராகவனையும் கண்டு திடுக்கிட்டு நின்றார். ''என்ன மனோகர், இந்த நேரத்திலே இங்கே வந்திருக்கிறாய்! என்ன விசேஷம்?'' என்று கேட்டார். அவரிடம் எல்லா விவரங்களையும் வெளியிட்டான் அவன். சிமிழைத் திறந்து பார்த்த அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. பரபரப்புடன் கூறினார் அவர்: ''மனோகர்! ஏதோ நான் உங்களை சாதாரணமாகத்தான் நினைத்தேன் முதலில். இப்போதுதான் உங்கள் சாமர்த்தியம் முழுவதும் எனக்குத் தெரிகிறது. எத்தனையோ வருஷங்களாகத் தெளிவாகாமல் இருந்த விஷயங்களெல்லாம் இப்போதுதான் உங்களால் விளங்குகிறது. அதெல்லாம் இப்போது சொன்னால் உங்களுக்குப் புரியாது. பின்னால் தானே தெரியும். இப்போது இந்தப் பெட்டியை நான் வைத்துக்கொள்வதில் பலனில்லை. இதற்காக எத்தகைய வேட்டை நடக்கிறதென்று உங்களுக்குத் தெரியாது. அங்கே இல்லையென்றால் வேட்டை இங்கேயும் தொடரும். ஆகையால் இதை இன்ஷ்யூர் செய்து சென்னைக்கு அனுப்பிவிடலாம் என்று நினைக்கிறேன். அதிலே உனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே?'' என்றார். ''உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் ஸார்'' என்றான் மனோகரன்.

விடியற்காலை மனோகரும் ராகவனும் பங்களாவை அடைந்ததும் சந்தானம் அப்படியே அவர்கள் இருவரையும் கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தார். ''நேற்று இரவெல்லாம் என் உயிர் என்னிடமே இல்லை, மனோகர். முருகன் உங்கள் இருவரையும் காணவில்லை என்று சொன்னதும் தான், எனக்கு அவனை நம்பி உங்களை அனுப்பியது எவ்வளவு தவறு என்பது தெரிந்தது. இரவே உங்களைத் தேடிவர ஆட்களை அனுப்பினேன். அவர்கள் எல்லாருமே ஏரியைச் சல்லடை போட்டுச் சலித்துக்கொண்டிருக்கிறார்களாம். நேற்று இரவு இங்கே வேறு ஒரே அமர்க்களம், புத்தக அறையிலே. அதுவும் தவிர உங்கள் தாத்தாவோ மயக்கம் போட்டு விழுந்து கலாட்டா செய்து விட்டார். அதனாலேயே நான் வர முடியவில்லை. ஆனால் என் மனம் மட்டும் சொல்லிக்கொண்டிருந்தது, நீங்கள் எப்படியும் தப்பி விடுவீர்கள் என்று. எல்லாம் அந்தச் சாமுண்டேச்வரியின் அருள்தான். சரி!

உள்ளே போய் ஏதாவது ஆகாரம் சாப்பிடுங்கள்'' என்ருர் அவர்.

உள்ளே சென்றதும் ஓர் ஆள் வந்து,''எஜமான்! மானேஜர் ஐயா இந்தக் காகிதத்தை அந்த ரூமிலே கண்டெடுத்தாராம். இதை உங்க ளிடம் காட்டச் சொன்னுர்'' என்று ஒரு காகிதத் துண்டை மனேகரிடம் கொடுத்தான். பெரிய கொட்டை அச்செழுத்துக் களை வெட்டி அதிலே ஒட்டி இருந் தது. அப்படி ஒட்டப்பட் டிருந்த எழுத்துக்களால், ''எச்சரிக்கை! இறுதி எச்சரிக்கை!'' என்ற வார்த்தைகள் உருவாக்கப்பட் டிருந்தன. அதன் கீழே ஒரு குத்து வாளின் படமும் அதன் நுனியில் சிவப்புப் புள்ளியும் காணப் பட்டன. ''சரி'' என்று சொல்லி விட்டு அதை மடித்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். 'இதைப் போட்டது யார்? சந்தானமா அல்லது வேறு யாராவதா?' இந்தக் கேள்வி மனேகரின் மனத்தில் விசுவ ரூபம் எடுத்து நின்றது.

16

சோளிப்பட்டி ஜமீன்தார் சோம்பேறிமுத்துத் தேவர் தம் உடன்பிறப்பான சோம்பலுக்குச் சற்று நேரம் ஓய்வு கொடுத்து விட்டுச் சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். அடுத்த படியாகத் தம் தொண்டையையும் ஒரு முறை கனைத்து விட்டுக் கொண்டார். பிறகு பேசவும் ஆரம் பித்தார். ''ஏனையா! நீர் என்ன சுத்த உதவாக்கரைச் சுப்பளுக இருக்கிறீர்? நானும் உம்மிடம் விஷயத்தைச் சொல்லிப் பத்து நாளுக்கு மேல் ஆகிறது; இன்னும் ஒன்றையும் காணுேமே! என்ன, எருமைமாட்டின் முதுகில் மழை என்று நினைப்போ?'' இப்படிக் கேட்டுவிட்டுத் தம் களைப்பு நீங்கு வதற்கு எதிரே இருந்த ஆரஞ்சுக் கிரஷ்ஷை ஒரு முறை ஓர் இழுப்பு இழுத்தார். அதை ருசித்து ருசித்து விழுங்கினுர். அதே சமயம் எதிரே இருந்தவர் பேசத் தொடங் கினுர்.

''ஜமீன்தார்வாள், அப்படி எல்லாம் சொல்லக் கூடாது. விஷயம் கழுத்துவரை வந்து விட்டது.''

''யார் கழுத்துக்கு ஐயா வந்துவிட்டது? உம்ம கழுத் துக்கா?'' என்று கேட்டு ஜமீன்தார் மறுபடியும் ஒரு வாய் கிரஷ்ஷை உள்ளுக்கு இழுத்தார்.

''அப்படி இல்லை ஜமீன்தார் வாள்! விஷயம் என்கிற மனிதனைக் கழுத்துவரை செய்தாகிவிட்டது. இன்னும் தலைதான் பாக்கி என்று சொல்ல வந்தேன். புதிதாக இரண்டு காக்கைகள் வந்திருக் கின்றன, பாருங்கள், அவை சதா கூச்சல் போட்டுக் கழுத்தை அறுக் கின்றன. மேலே அந்தக் கிழக் கோட்டான்; அது வேறு ஒரு தலை வலி எனக்கு. சதிகாரக் கொக்கு களும் வேஷக்கார வேட்டை நாய் களும் அங்கே வட்டமிட்டுக் கொண்டேயிருக்கின்றன. என்ன இருந்தாலும் விஷயம் காதும் காதும் வைத்தாற்போல நடந்து விடணுமே! ஜமீன்தார்வாள் பேர் வெளியே வந்து விடக்கூடாது பாருங்கள்! அதனுல்தான் அவசரப் பட்டுக் காயை அடித்து விட வேண்டாம் என்று பார்க்கிறேன். எப்படியும் அந்தக் காய் நம் முடையதுதான். காக்காய்களை முதலில் மடக்கிப் போடுவது நல்லது பாருங்கள். இரண்டையும் முடியாவிட்டால் ஒன்றையாவது பிடித்துப் போடுவதுதான் சௌகரி யம். அந்தக் கவலை எல்லாம் உங் களுக்கு ஏன்? எல்லாம் என் பொறுப்பு. நான் சொல்கிறபடி செய்யுங்கள். காய் தானே கைக்கு வந்துவிடும்'' என்ருர் அவர்.

''நீர் காக்கையைத்தான் மடக் கும் அல்லது கழுதையைத்தான் மேய்த்துக் கட்டும்; எனக்குக் கவலை இல்லை. இன்னும் இரண்டு நாளில் அந்தக் கல் என் கையில் வந்து சேரவேண்டும். அவ்வளவு தான்'' என்று முடித்தார் ஜமீன் தார்.

''சரி! நீங்கள் சொல்கிறுப்போல் சீக்கிரமே முடிக்கப் பார்க்கிறேன். அப்ப, நான் வரட்டுமா?'' என்று எழுந்தார் அந்த ஆள்.

"சரி! நம்ம மானேஜர் கிட்டே வேண்டியதை வாங்கிகிட்டுப் போம்" என்று அவருக்கு விடை கொடுத்துவிட்டு மீதியிருந்த கிரஷ்ஷையும் ஒரே உறிஞ்சாக உறிஞ்சிவிட்டுக் கால்களைத் தூக்கி எதிரே இருந்த மேஜைமேல் போட்டுக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தார். அவர் சாய்ந்த வேகத்தில் அவர் இளம் தொந்தி சற்று நேரம் குலுங்கிவிட்டு மெதுவாக ஓய்ந்தது.

ஜமீன்தார் சோம்பேறிமுத்துத் தேவர், பரம்பரையாகவே பெரிய பணக்காரர்களான சோனிப்பட்டி ஜமீன் குடும்பத்தில் செல்லப் பிள்ளையாகப் பிறந்தவர். கேட்க வேண்டுமா, அவருடைய அட்டகாசத்துக்கு! மஹாராஜா [அவர் தான் பெரிய ஜமீன்தார்]வுக்குத் தம் மகன் படித்து, மேல் நாடுகளுக்கெல்லாம் போய், உயர்ந்த பட்டங்களை எல்லாம் வாங்கவேண்டும் என்று ஆசை. ஆனால் யுவராஜா முத்துத் தேவர் [அதுதான் சோம்பறி முத்துத் தேவர்] பள்ளிக்கூடத்தில் தம் இடத்தின் மேல் அநுபவ உரிமை கொண்டாட ஆரம்பித்து விட்டார். ஒவ்வொரு வகுப்பிலிருந்தும், ஜமீன்தாரின் செல்வாக்கும், ஆசிரியர்களின் பயந்தாங்கொள்ளித்தனமும் சேர்ந்துதான் நெம்பித் தள்ளி மேல்வகுப்புக்கு அவரை உருட்டித் தள்ளிக்கொண்டு போக வேண்டியிருந்தது. இப்படியாகத் தானே குட்டிக்கரணம் போட்டுக்கொண்டே தமது எட்டாப் படிப்பில் எட்டாம் வகுப்பை எட்டிப் பிடித்தபோது பெரிய ஜமீன்தார் இந்த உலகை விட்டு சிவலோகப் பிராப்தியை அடைந்தார். அப்புறம் என்ன! எட்டாப் படிப்பிற்கு ஒரு முற்றுப் புள்ளியைச் சற்றும் தாமதமின்றி வைத்துவிட்டு, பெரிய மஹாராஜாவாகப் பதவியேற்றார், யுவராஜா சோம்பேறி முத்துத் தேவர். படிப்பில்தான் சற்றுச் சோடையே தவிர ஜமீன்தார் மற்ற விவகாரங்களிலெல்லாம் பலே கைகாரர்தான். இந்த வட்டாரத்தி

லேயே மிகப் பெரிய மனுஷனாகப் பெயர் வாங்க வேண்டும் என்று அவருக்கு ஆசை. 'ஜமீன்தார் வாளுக்கு ஒரு கல்லினால் பெரிய அதிருஷ்டம் வரப் போகிறது' என்று ஒரு ஜோதிஷர் ஒரு குண்டைப் போட்டுவிட்டுப் போய்விட்டார். அதுவும் அது ஒரு சக்கரம் பதித்த சிவப்புக் கல்லாகத்தானிருக்கும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவ்வளவுதான்! ஜமீன்தார் கல் வேட்டைக்குப் புறப்பட்டுவிட்டார்.

17

சாமுண்டிபுரி கோயிலில் குடிகொண்டிருக்கும் சாமுண்டி தேவியின் கழுத்திலுள்ள ரத்தின ஹாரத்தில் உள்ள சிவப்புக் கல்லில் ஏதோ சக்கரம் செதுக்கப் பட்டிருப்பதாகவும் அது மகா சக்தி வாய்ந்தது என்றும் கேள்விப்பட்ட ஜமீன்தார், அந்த ரத்தினத்தை எப்படியாது அடைந்து விடுவதென்று முடிவு செய்தார். அந்தச் சிவப்புக் கல்லை அடைய எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால் அவை எதுவும் பயன்படவில்லை. கடைசியில் தவறான வழியில் அதை ஜமீன்தார் அடைந்தார். ஆனால் என்ன ஏமாற்றம்! வந்தது போலவே அது போய்விட்டது. அந்த ரத்தினத்தை மீண்டும் அடைய ஜமீன்தார் எவ்வளவோ முயன்றார். அந்த முயற்சியிலேதான் சென்ற அத்தியாயத்தில் வந்த ஆளின் உதவியை நாடினார். என்றைக்கு ரத்தினம் தம்மிடம் வருமோ என்ற யோசனையுடன் படுத்திருந்தார் சோம்பேறி முத்துத் தேவர்.

எங்கே, எப்படிப் போயிருக்கும் என்பது நிச்சயமாகத் தெரியும் அவருக்கு. அதை அடைவதற்கும் சரியான வழியை அவர் கண்டு அதிலே இறங்கிவிட்டார். பலன் கிடைக்க வேண்டியதுதான் பாக்கி. அது மட்டும் கைக்கு வந்துவிட்டால்! ஆஹா! அப்புறம் அஷ்ட ஐசுவரியங்களும் அவரைத் தேடிக் கொண்டு க்யூ வரிசையில் ஓடி வந்து நிற்காதா? அந்த வாழ்க்கையை அடைவதற்காக எது செய்ய வேண்டும் என்றாலும் தயங்குவதில்லை என்ற தீர்மானத்துடன் எழுந்தார் ஜமீன்தார்.

மனோகர் தலையைத் தன் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டான். தலைவலி அவன் உயிரையே வாங்கிக்கொண்டிருந்தது. முதல் நாள் இரவு ஏரி நீரில் மூழ்கியதும் நீந்தியதும் இரவு வெகு நேரம் வரை விழித்திருந்ததுமாக எல்லாம் சேர்ந்து கடுமையான தலைவலியை உண்டாக்கியிருந்தன. ஓயாத ஒழியாத எண்ணங்கள், கவலைகள் வேறு அதை அதிகப்படுத்திக்கொண்டிருந்தன. இந்த நிலையில் கடைசியாகக் கிடைத்த செய்தியை எப்படி இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். அதைத் தீர்க்க ராகவன் முன்வந்தான். ஆனால் அவன் விஷயமே இப்போது புதிய கவலையாக உருக்கொண்டு விட்டது. மாலை மூன்று மணிக்குச் சென்ற ராகவன் மணி ஆறாகியும் இன்னும் திரும்பவில்லை. 'அவன் ஏன் வரவில்லை? அவனுக்கு என்ன ஆபத்து வந்து விட்டதோ? யார் கையிலே சிக்கி விட்டானோ?' மனோகர் புழுவாய்த் துடித்தான். அவனால் மட்டும் முடிந்திருந்தால் எப்போதோ அவன் பறந்து போயிருப்பான். இப்போது வேறு யாரை நம்பி அனுப்புவதென்று அவன் தலை சுழன்றது.

அந்தச் சமயத்திலேதான் சந்தானம் உள்ளே வந்தார். அவர் முகம் பயத்தால் வெளுத்துப்போயிருந்தது. எதுவும் பேசாமல் தம் கையிலிருந்த காகிதத்தை நீட்டினார். சிறு துண்டுக் காகிதம்தான் அது. ஆனால் அதிலேதான் எத்தனை பயங்கரம் நிறைந்திருந்தது?

''மனோகர்! ஜமீன்தார் வீட்டில் எனக்கு ஆபத்து! உடனே வா!'' இவ்வளவுதான் அதிலிருந்த செய்தி. ஆனால் அதன் அடியில் ஏதோ கிறுக்கப்பட்டிருந்தது. அதை மனோகரால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ''விஷயம் ரொம்பவும் முற்றிவிட்டது. ஜமீன் ஆட்கள் அவரைப் பிடித்

துக் காரில் போட்டுக் கொண்டிருந்தார்கள். தற்செயலாக அதை நான் கவனித்தேன். ஒரு சிறு உருண்டையை என் பக்கம் வீசினார் அவர். அதை எடுத்தால் இந்தக் கடிதம் கிடைத்தது. உடனே நான் போக வேண்டும். நீங்களும் வருவதானால் அழைத்துப் போகலாம் என்று வந்தேன். இதற்குள் என்ன ஆகிவிட்டதோ'' என்றார் சந்தானம். மனேகர் துள்ளி எழுந்தான். ராகவனுக்கு ஆபத்து என்றதுமே அவன் தலைவலி, உடம்புச் சோர்வு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. "சீக்கிரம் புறப்படுங்கள் போவோம், சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று பறந்தான் மனேகர். சில நிமிஷங்களில் கார் பறந்துகொண்டிருந்தது.



18

கார் கனவேகமாக ஓடிக்கொண்டிருந்தது. சாலையின் இருபுறங்களிலும் உள்ள மரங்கள் பின் நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. திடீரென்று ஓர் ஆள் சாலையின் குறுக்கே பாய்ந்தான். அவன்மீது மோதாமல் இருக்கச் சட்டென்று பிரேக்கைப் போட்டு நிறுத்தினார் சந்தானம். அடுத்த கணமே ஏழு எட்டு ஆட்கள் ஓடிவந்து காரைச் சூழ்ந்துகொண்டார்கள். சந்தானத்தை இரண்டு ஆட்கள் பற்றி இழுத்துத் தள்ளினார்கள். பலமான அடி ஒன்று அவர் மண்டைமேல் விழுந்தது. அவர் மூர்ச்சையே அடைந்துவிட்டார். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து சுய நினைவை அடைந்த சந்தானம் சற்றுத் தூரத்தில் கார் போய்க் கொண்டிருந்ததைக் கண்டார். சந்தானத்தைச் சிலர் சூழ்ந்து கொண்ட அதே சமயம், சிலர் மனேகரைச் சூழ்ந்து கொண்டார்கள். சில விநாடிகளில் அவனைக் கட்டிக் காரில் ஒரு மூலையில் தள்ளினார்கள். வேலைகள் முடிந்ததும் மற்றவர்களும் ஏறிக் கொள்ள, கார் புறப்பட்டது.

சந்தானத்துக்கு உண்மையாகவே இப்போது பயம் ஏற்பட்டுவிட்டது. 'நம் சூழ்ச்சியை, எப்படியோ யாரோ மனேகருக்கு வேண்டியவர்கள் கண்டுபிடித்துக் கொண்டு, நம்மை இப்படிக் கட்டிப் போட்டுவிட்டுக் காரை ஓட்டிக் கொண்டு போய்விட்டார்கள். இன்னும் இதிலே சந்தேகம் என்ன! இனிமேல் என்ன செய்வது?' என்று சந்தானம் குழம்பினார்.

(தொடரும்)

நவநீதன்

எஸ். கே. ராவ்

நவநீதன் நல்ல பையன்; கெட்டிக்காரன். எந்த வேலையில் அவன் ஈடுபட்டாலும் அதைச் சாமர்த்தியமாகச் செய்யும் திறமை வாய்ந்தவன். காரணம், அவன் மனம், செய்யும் வேலையில் ஒரே கவனமாக இருந்து, அதிலேயே ஒன்றிப் போய்விடுவதுதான். அதில் எவ்விதக் குறைபாடும் இருக்காது. இது அவனுடைய நல்ல குணமாகும். ஆனால் விளையாட்டில் புத்தி செலுத்துவது என்ற ஒரு குறை அவனிடம் இருந்தது. பையன்களுக்கு இது சர்வ சகஜம் தான். எனினும் விளையாட்டுப் புத்தியினால் அன்று அவன் வெட்கம் அடையும்படி நேர்ந்துவிட்டது. கணக்கு வாத்தியார் வகுப்பில்

பாடம் நடத்திக்கொண் டிருந்தார். பையன்களுக்குக் கழித்தல் கணக்கு சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தார். பையன்கள் கேள்வி களுக்குப் பதில் சொல்லிக்கொண் டிருந்தார்கள். நவநீதன் முறை வந்தது. ஆனால் நவநீதன் அப் பொழுது பாடத்தைக் கவனித்துக் கொண்டிருக்கவில்லை. வகுப்பின் மூலையில் எலிப்பொந்து ஒன்று இருந்தது. அதிலிருந்து எலி ஒன்று வெளியே வந்து, வாயில் ஏதோ தின்பண்டத்தைக் கவ்விக் கொண்டு மறுபடி பொந்திற்குள் நுழைந்து போய்க்கொண்டிருந்தது. அது வாயில் இருக்கும் பதார்த்தத் துடன் பொந்திற்குள் நுழையக் கஷ்டப்பட்டு முயற்சி செய்து கொண்டிருந்தது. இதை நவ நீதன் கவனித்துக்கொண்டே இருந்தான். எலியின் முயற்சியில் அவன் தன் கவனம் முழுவதும் செலுத்தினான். அது உள்ளே போகும் வரை பார்த்துக் கொண்டே இருந்துவிட்டான். அந்தச் சமயம் பார்த்து வாத்தியார் இவனை, ''எட்டில் ஐந்து போனால்?'' என்று கேள்வி கேட்டு வைத்தார். நவநீதன் கவனம் அப்பொழுது அரைகுறையாக வாத்தியார் கேள்வியிலும் எலிப்பொந்திலுமாக இருந்தது. அதன் காரணமாகச் சட்டென்று, ''போகவில்லை சார், வால் பாக்கி'' என்று பதில் சொல்லிவிட்டான். இதைக் கேட்ட பையன்கள் எல்லோரும் கைதட்டிச் சிரித்தார்கள். வாத்தியாரும் அதில் கலந்துகொண்டார். நவநீதன் தவற்றை உணர்ந்து வெட்கம் அடைந்து, தலைகுனிந்துகொண்டான். வாத்தியார் பிறகு நடந்ததைத் தெரிந்து கொண்டு கேள்வியை மறுபடி கேட்டார். இப்போது நவநீதத்தின் சரியான விடையினால் வாத்தியார் அவனை மன்னித்து மேலே கேள்விகள் கேட்டுக்கொண்டே போனார்.

அதே வகுப்பில் படிக்கும் மற்றொரு பையன் அங்கப்பன். அவன் நன்றாக ஆடை அணிந்து தலைவாரிக் கொண்டு அழகு செய்துகொள்வதில் விருப்பம் உள்ளவன். ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் நாடகம் போட்டார்கள். அதில் அங்கப்பனுக்கு முக்கியமான ராஜா வேஷம் கொடுக்கப்பட்டது. அங்கப்பன் ஆள் அழகனே தவிர, அவ்வளவு திறமை போதாது. புத்தி சாதுரியமும் இல்லை. நாடகத்தில் பேச வேண்டியதை அவனுக்கு நன்றாகச் சொல்லிக் கொடுத்திருந்தார்கள். அவனும் நன்றாக உருப்போட்டுத் தான் இருந்தான். என்றாலும் புத்தி நுட்பம் அதிகம் இல்லாததால் சமயத்தில் வார்த்தைகளின் அர்த்தத்தை உணராமல் வார்த்தைகளை ஒன்றுக்கு ஒன்று மாற்றிச் சொல்லி, சபையில் உள்ளவர்கள் எல்லோரும் கைதட்டிச் சிரிக்கும்படிச் செய்துவிட்டான். நாடகத்தில் ஒரு சந்தர்ப்பத்தில், ''கதவைப் பூட்டிச் சாவியைப் பையில் போட்டுக் கொண்டு போ'' என்று சொல்லும் படியாக இருந்தது. அங்கப்பன் அந்தச் சமயத்தில், ''சாவியைப் பூட்டிக் கதவைப் பைக்குள் போட்டுக்கொண்டு போ'' என்று மாற்றிச் சொல்லிவிட்டான். பையன்கள் கரகோஷம் செய்ததுடன் கதவு பைக்குள் எப்படிப் போகும் என்று கூச்சல் போட்டுப் பரிகசித்தார்கள்.

இதில் முதலில் சொன்னது போன்ற காட்சியை நமக்கு ஒரு கவி காண்பிக்கிறார். நவநீதனைப் போன்ற ஆயர் மங்கை ஒருத்தி தலையில் தயிர்ப் பானையுடன் தெரு

அப்பா: பாலு! நான் வெளியிலே போனப்புறம்கூட நல்லவனா, விஷமம் செய்யாமெ இருக்கணும், தெரியறதா?

மாது: சரி அப்பா. அப்படியானா ஒரணா கொடுத்துட்டுப் போ!

அப்பா: ஒரணா எதுக்குடா? உன் மாதிரி இருந்தப்போ காலணாகூட வாங்கிக்காமல் நான் நல்லவனா இருந்தேன்; தெரியுமா?

மாது: தெரியும் அப்பா! இப்பத்தான் எல்லாம் மாறிப் போச்சே! ஹைட்ரஜன் பலூன் எல்லாம் அப்போ ஏது?

வில் தயிர் விற்கக் கிளம்பினாள். ''தயிரோ தயிர்!'' என்று கூவி, தயிர் விற்றுக்கொண்டு தெருவில் சென்றாள். ஆனால் கொஞ்ச தூரம் விற்றுக்கொண்டு போனதும் தெருக்கோடியில் கண்ணனுடைய உருவம் அவளுக்குத் தெரிந்தது. உண்மையில் அங்கே கண்ணன் இல்லை. தெருக்கோடியில் இருக்கும் ஆலயத்தைக் கண்டதும் கண்ணனுடைய அழகுத் தோற்றம் அவளுடைய மனத்தில் எழுந்தது. அகக் கண்ணால் கண்ணனைக் கண்டாள். உடனே அவளுக்குத் தயிர் விற்கும் நினைவு மறந்து போயிற்று. சற்றும் சுய உணர்வு இல்லாமல், ''தயிரோ, தயிர்'' என்று விற்பதற்குப் பதிலாக, கண்ணனுடைய பெயர்களையெல்லாம் சொல்லிக் கூவத் தொடங்கினாள். கண்ணனது பெயர்கள் அவளுக்கு இன்பத்தைத் தரக் கூடியவை. அதனால், ''கோவிந்தா, தாமோதரா, மாதவா'' என்று தொடர்ந்து தயிர் விற்பதைப் போல் சொல்லிக்கொண்டே போனாள். தெருவில் போவோர் இவளைப் பார்த்துப் பரிகசித்தார்கள். சற்றுத் தூரம் போன பிறகுதான், தான் செய்த தவற்றை அவள் உணர்ந்து, வெட்கித் தலை குனிந்து கொண்டாள். கண்ணனைக் கடிந்து, தன்னை இவ்விதம் புத்தி மாறாட்டம் அடையச் செய்ததற்கு அவனைப் பழிவாங்க வேண்டும் என்று மனத்தில் நினைத்துக்கொண்டாள்.

சமயத்தை எதிர்பார்த்த ஆயர் மங்கைக்கு ஏற்றாற்போல் ஒரு நாள், கண்ணனுக்கு யசோதை கதை சொல்லித் தூங்கச் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது கண்ணன் தாயின் வார்த்தைகளை நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டு கதையைச் சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

தாய் சொல்கிறாள்: ''ராமன் என்று ஒருவன் இருந்தான்.''

''உம்'' என்கிறான் கண்ணன்.

''அவனுடைய மனைவியின் பெயர் சீதை.''

''உம்.''

''அவர்கள் இருவரும் தந்தை தசரதனின் கட்டளைப்படி காட்டில் வசிக்க நேர்ந்தது. பஞ்சவடி என்னுமிடத்தில் அவர்கள் இருந்த சமயம், ராவணன் என்ற அரக்கன் சீதையை தூக்கிக்கொண்டு போய் விட்டான்.'' யசோதை இவ்வாறு சொன்னதும், ''உம், உம்'' என்று கதையைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன் சட்டென்று, ''ஏ, லக்ஷ்மணா! எங்கே, என் வில்? எடு அதை'' என்று கர்ஜனையுடன் எழுந்தான் கண்ணன். பக்கத்தில் நின்ற ஆயர்மங்கை ''லக்ஷ்மணனாவது வில்லாவது!'' என்று சொல்லி, கை தட்டிச் சிரித்தாள்.

பேய் அடித்ததா...?

தங்கமணி

அன்று ஞாயிற்றுக்கிழமை. இரவு பத்து மணிக்கு மேலேயே ஆயிற்று. மாரிசாமிக்குத் தூக்கமே வரவில்லை. இலவம் பஞ்சு மெத்தையிலே அப்படியும் இப்படியுமாகப் புரண்டுகொண்டிருந்தான்.

மணி பதினொன்று ஆயிற்று. அடுத்த அறையில் அவன் அப்பா இருமும் சப்தம் கேட்டது. மாரிசாமி அங்கே சென்று பார்த்தான். உள்ளே, கட்டிலில் படுத்தவாறே என்னவோ ஓர் ஆங்கிலப் புத்தகத்தைக் கருத்துடன் படித்துக்கொண்டிருந்தார் அவன் அப்பா, டாக்டர் ராமநாதன்.

''அப்பா..'' என்றான் மாரிசாமி. அப்பா நிமிர்ந்து பார்த்து, ''வா, உள்ளே வா. ஏன், இன்னும் தூங்கவில்லையா?'' என்று கேட்டார்.

''தூக்கம் வரவில்லை.''

''ஏன்?''

''எதிர் வீட்டுப் பையன், சாயந்தரம் ஒரு பிசாசுக் கதை சொன்னான்..'' அப்பாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு மிகவும் ஆவலுடன் ஆரம்பித்தான் மாரிசாமி.

''பேயாவது, பிசாசாவது. எல்லாம் சுத்தப் பொய்! புளுகு! வீண் கற்பனை!''

''என்னப்பா, ஒரேயடியாக இப்படிச் சொல்லிவிட்டீர்கள்! திடீர் மரணம் அடைபவரெல்லாம் பேயாக வந்து அலைகிறார்களாம்! அந்தப் பையன், கண்டது - கேட்டது - படித்தது எல்லாவற்றையும் கதை கதையாய் அளக்கிறான்!''

''அப்படியானால் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் திடீர் மரணமடைந்த கோடிக்கணக்கான மனிதர்கள் பேயாக மாறியிருந்தால் ஜப்பான், ஜெர்மனி, மலாயா, பர்மா முதலிய நாடுகளில் இன்றைக்கு ஒரே பேய் மயமாகத் தானே இருக்கும்? அப்படி ஒன்றும் காணோமே!'' அவன் அப்பா சொல்லி முடிப்பதற்குள், வாசலிலிருந்து யாரோ கூப்பிட்டார்கள்: ''சார்!...டாக்டர் சார்!...சார்...''

உடனே, இருவரும் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். வாசலில், மாரிசாமியின் பள்ளித் தோழனான சாமிநாதன், தன் வீட்டு வேலைக்காரக் கிழவனுடன் வந்திருந்தான். கிழவனுடைய கையில், சாமிநாதன் பேரன்புடன் வளர்க்கும் 'செந்தேள்' என்னும் நாய் சாகும் நிலையில் கிடந்தது. அதன் வெளிறிய கண்கள் பிதுங்கியிருந்தன. மூக்கிலும் வாயிலும் ரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

பாவம், அந்த நாயின் பரிதாபமான கதியைக் கண்டதும், மாரிசாமிக்குத் துக்கம் கவ்வியது. உடனே அவன் மனத்துள் சில மாதங்களுக்கு முன், சாமிநாதனின் வீட்டில் நடந்த ஒரு சம்பவம் பளிச்சிட்டது.

அன்று, அமாவாசைத் தினம். நள்ளிரவு. சூழ்ந்து கவ்விக் கிடந்த கொடிய இருள் பயங்கரத்தை ஊட்டிக்கொண்டிருந்தது. எங்கும் காடாந்தகார அமைதி. அப்போது சாமிநாதனின் வீட்டில், யாரோ ஒரு திருடன் புகுந்தான். கைக்குக் கிட்டிய பொருள்களைச் சுருட்டிக்கொண்டு கொல்லைப்புற வழியாக ஓடினான். வீட்டு மதிலின் மீது ஏறப் போகும் சமயம் - கொல்லைப் புறத்தில் எங்கோ ஒரு மூலையிலிருந்த சாமிநாதனின் 'செந்தேள்' எப்படியோ அந்தத் திருடனைக் கவனித்துவிட்டது!

உடனே, அது ஆக்கிரோஷத்துடன் உறுமிக்கொண்டே தாவிப் பாய்ந்தோடியது. ஆனால், அதற்குள் திருடன் மதிலேறித் தெரு

வில் குதித்து ஓட ஆரம்பித்து விட்டான்! என்றாலும், செந்தேள் விடவில்லை. அது ஒரே பாய்ச்சலில் மதிலைத் தாண்டி, தெருவில் குதித்துத் திருடனைத் துரத்திச் சென்றது. ஊரே கிடுகிடுக்கும் படியாகக் குரைத்துக்கொண்டு விரட்டியது!

சற்று நேரத்துக்குள், சாமிநாதனின் வீட்டுக்கு ஒரு பர்லாங்குத் தூரத்திலே ஒரு பாழடைந்த துர்க்கைக் கோயில் - அங்கே வந்ததும் அந்தத் திருடன் காலிடறிக் கீழே விழுந்தான். உடனே, துரத்தி வந்த செந்தேள் அவன்மீது பாய்ந்தது. அவன் நெஞ்சைக் கவ்வியது:



குதறியது! திருடன் அதனிடமிருந்து தப்பிக்க எவ்வளவோ முயன்றான்; முடியவில்லை. செந்தேள் அவனைக் கதறக் கதறக் கடித்துக் குதறிக் கிழித்தது. சற்று நேரத்துக்குள், கோயில் வாசலிலேயே திருடன் இறந்து போனான். சாமிநாதனின் வீட்டிலிருந்து களவாடப்பட்ட சுமார் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் மீண்டன.

இந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டதும் மாரிசாமியின் துக்கம் மேலும் பெருகியது. ''ஐயோ! வீரம் மிகுந்த இந்த நாய்க்கா இந்தக் கோரமான கதி? யார் செய்தது இந்த அக்கிரமத்தை...?'' என்று சாமிநாதனைக் கேட்டான்.

சாமிநாதன் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுவதைக் கண்டதும் மாரிசாமிக்கும் அவனுடைய அப்பாவுக்கும் மனசு துடித்தது.

''அழாதே, தம்பி. நாய் உயிரோடு இருக்கிறதா? உள்ளே கொண்டு வா, பார்க்கலாம்...'' என்று உள்ளே சென்றார் அவன் அப்பா. சிகிச்சை பண்ணும் அறையில், ரப்பர் பாய் விரித்த மேஜை மீது நாயைக் கிடத்திவிட்டுக் கிழவன் சொன்னான்: ''ஐயா.... கொஞ்ச நேரத்துக்கு முன்னே, அந்தத் துர்க்கைக் கோயில் பக்கமாக இந்த நாய் போயிருக்கிறது. முன்னே ஒரு சமயம் இந்த நாயால் கடிபட்டுத் திடீர் மரணமடைந்த அந்தத் திருடன் அங்கே பேயாக உலாவுவதாகக் கேள்வி. அந்தப் பேய்தான், இப்போது சமய சந்தர்ப்பம் சரியாக வாய்க்கவே, நாயைப் பழி வாங்கி விட்டிருக்கிறது! ஒரே அடியாக அடித்து விட்டிருக்கிறது!''

அந்தக் கிழவன் சொல்லித் தீர்த்த மறு விநாடியே, சாகப் பிழைக்கக் கிடந்த நாய், செத்தே போயிற்று!

பாவம், சாமிநாதன், 'ஓகோகோ..' வெனக் கதறினான்! சாமிநாதனுக்கு ஆறுதல் கூறித் தேற்றினார் டாக்டர்.

அவர்கள் சென்ற பின், மாரிசாமி கண்ணைத் துடைத்துக் கொண்டு அப்பாவைப் பார்த்துக் கேட்டான்: ''அப்பா, இப்போது என்ன சொல்லுகிறீர்கள் - உலகத்தில் பேய் இருக்கிறதா, இல்லையா?''

''மாரிசாமி, வீணாக மனசை அலட்டிக் கொள்ளாதே. உன்னுடைய கேள்விக்கு நாளைக்குப் பதில் சொல்லுகிறேன். நீ போய்த் தூங்கு.''

அப்பா தன் அறைக்குள் நுழைந்தார். மாரிசாமி அவர் பின்னாலேயே சென்றான்.

''அப்பா. எனக்குத் தனியே தூங்கப் பயமாயிருக்கிறது. நானும் உங்கள் அறையிலேயே படுத்துக் கொள்கிறேன்....'' என்று சொல்லி அங்கேயே படுத்துக் கொண்டான் மாரிசாமி.

* * *

இரண்டாவது நாள், மாலை. பங்களா வராந்தாவில், அழகிய சோபாவில் தனியே அமர்ந்து சிந்தனையைச் செலவிட்டுக்கொண்டிருந்தான் மாரிசாமி.

அப்போது அவன் பள்ளித் தோழர்களில் ஒருவனான நாகப்பன் மாரிசாமியின் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

''ஹூம்!.. மாரிசாமி, நான் ஓர் அநியாயம் செய்துவிட்டேனடா!'' என்றான்.

''என்ன அநியாயம்?''

''மாரிசாமி! நான் உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம்



தாத்தா: பாலு, பள்ளிக் கூடம் போறதுன்னு உனக்குப் பிடிக்கும், இல்லே?

பாலு: ஓ, பிடிக்குமே! பள்ளிக்கூடம் போறதுக்கும் பிடிக்கும், பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரதுக்கும் பிடிக்கும். ஆனால் அங்கே உட்கார்ந்திருக்கத்தான் பிடிக்காது, தாத்தா!

சொல்லப்போகிறேன். ஆமாம், இன்றைக்கு என்ன கிழமை?''

''செவ்வாய்க்கிழமை...''

''மாரிசாமி....மூன்று நாட்களுக்கு முன்னே, சனிக்கிழமை சாயந்தாம், நான் சாமிநாதனைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்குச் சென்றேன் வீட்டு வாசலில் சாமிநாதனின் கோபக்கார அப்பா உலாவிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டால் அவருக்கு எட்டிக் காயாகக் கசக்கும் என்பதும் அவரைக் கண்டால் எனக்குச் சிம்ம சொப்பனம் கண்டதுபோல என்பதும்தான் எல்லோருக்கும் தெரியுமே. ஆகவே, கொல்லைப் புறமாகச் சென்றேன். மதிலேறி உள்ளே குதித்தேன். குதித்தது தான் தாமதம் - உடனே, பேய் மாதிரி உறுமிக்கொண்டு எங்கிருந்தோ பாய்ந்தோடி வந்தது, செந்தேள்!

''நான் நெஞ்சம் அதிர்ந்து நிலை கலங்கிப் போனேன்! கோபத்துக்கு உள்ளாகும்போது பகுத்தறிவுள்ள மனிதனே நிதானம் இழந்துவிடுகிறான். இந்தச் சிற்றுயிர்ப் பிராணிக்கு என்னதான் பழகியிருந்தாலும் என்ன தெரியப் போகிறது! அந்த நாய்க்கு மதிலேறிக் குதிக்கிறவனெல்லாம் திருடன் என்கிற நினைப்போ, என்னவோ! அது என்னை நோக்கிப் பாய்ந்தது. நான்...நான்...என்ன சொல்வது...? நான் எப்படித்தான் அவ்வளவு சீக்கிரத்தில் மதிலைத் தாண்டிக் குதித்தேனோ - வீடுவந்து சேர்ந்தேனோ- தெரியவில்லை!..நாற்காலியில் வந்து உட்கார்ந்த எனக்கு என்னவோ, ஏதோ துடையில் 'சுள்!' என்று வலித்தது. நான் துடித்து எழுந்தேன். துடையைப் பார்த்தேன்....

''ஆ!..நாய் கடித்துவிட்டது! துடையில் அந்தப் பிசாசு நாயின் காளிப் பற்கள் அப்படியே பதிந்து கிடந்தன! நாய்க் கடி காயத்துக்கு நானே என் அறையில் வைத்திருந்த மருந்துகளைப் பூசிக் கட்டுப் போட்டுக்கொண்டேன். அப்பா, அம்மா யாரிடமும் இந்த விஷயத்தை வெளியிடவில்லை. டாக்டரிடமும் போகவில்லை. என் அறிவும் மனமும் வஞ்சம் தீர்க்க வழி தேடிக்கொண்டிருந்தன.

''மறுநாள், ஞாயிற்றுக்கிழமை. கடற்கரையில் குழந்தை எழுத்தாளர்கள் நடத்திய பொதுக் கூட்டத்துக்குப் போய்விட்டு, இரவு ஒன்பது, ஒன்பதரை மணி இருக்கும் - வீட்டுக்குத் திரும்பினேன். வரும் வழியில், துர்க்கைக் கோயில் வாசலில் அந்த நாய் - செந்தேள் - படுத்துக்கொண்டிருந்தது. அதைக் கண்டதும், என் உள்ளத்தில் புகைந்துகொண்டிருந்த பழி வாங்கும் வெறி திடீரென்று பற்றியெரிந்தது! சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடவில்லை. ஆமாம், பழி வாங்கிவிட்டேன்! ஒரு பெரிய கல்லைத் தூக்கிச் சென்று, அந்த நாயின் கழுத்தின்மீது போட்டேன்! அது கதறியது. சுழன்று சுழன்று விழுந்தது. நான் விடவில்லை; ஆத்திரம் தீரும்வரை அதன் வயிற்றில்

எட்டி எட்டி உதைத்தேன்! அது விழுந்தது. மீண்டும் எழுந்திருக்கவில்லை!

''மாரிசாமி, ஆனால்..அடுத்த நாள் திங்களன்று நாய்க் கடி காயத்தின் வலியை என்னால் சகிக்க முடியவில்லை! வீட்டில் யாருக்கும் தெரியாமல் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். டாக்டரிடம் 'நாய் கடித்துவிட்டது' என்றேன். அவர் காயத்தைப் பரிசோதித்துப் பார்த்தார். காயத்துக்குள்ளிருந்து ஒரு சிறு கண்ணாடிச் சில்லை எடுத்தார். அதை என்னிடம் காட்டி, 'தம்பி, இது நாய்க் கடி அல்லவே! எங்கேயோ விழுந்திருக்கிறாய்.' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்துப் பார்த்தேன்.

''ஆ..புரிந்துவிட்டது! நாய் என்னைக் கடிக்கவில்லை. நாயின் தாக்குதலுக்குத் தப்பிச் செல்ல மதிலேறிக் குதித்தேன். அல்லவா? அப்போது அந்த மதிலின் விளிம்பில் பதித்திருந்த கண்ணாடித் துண்டுதான் என் துடையைக் கீறிவிட்டிருக்கிறது!'' — நாகப்பன் இன்னும் சொல்வதற்குள், மாரிசாமி குறுக்கிட்டான்:

''ஆ, அப்படியா! அப்படி என்றால் நீ நாயை அடித்தது அநியாயம் தானே? அட பாவி!''

''நான் யோசித்துப் பார்க்காமல் நிதானமிழந்து செய்துவிட்ட அந்த அக்கிரமத்தை நினைக்க நினைக்க, மாரிசாமி, அதற்குப் பிராயச்சித்தமாக என்ன வேண்டுமானாலும் செய்வதற்கு நான் எப்போதும் சித்தமாயிருக்கிறேன்!''

''அழாதே, தம்பி. அறியாமல் செய்த குற்றந்தானே, பரவாயில்லை.''

இத்தனை நேரமும் நாகப்பன் சொன்னதையெல்லாம் மாடிப்படி ஓரமாக நின்று கேட்டுக்கொண்டிருந்த மாரிசாமியின் அப்பா அவர்களிடம் வந்தார். மாரிசாமியை நோக்கிப் புன்னகையுடன் கேட்டார்: ''என்ன, மாரிசாமி. பேய் அடித்ததா, நாய் கடித்ததா?''

''இரண்டும் இல்லை! எல்லாம் சமய சந்தர்ப்பச் சூழ்நிலைக் கோளாறுகள்தான், இத்தகைய மூட நம்பிக்கைகளுக்கு மூல காரணமாக அமைந்து விடுகின்றன!'' என்று கூறிய மாரிசாமியின் அறிவு, தெளிவடைந்தது.

காணாத பேனா

சு. ராமன்

காட்சி - 1

(கண்ணன் தன் இரு கைகளாலும் தலையை முட்டுக் கொடுத்துக்கொண்டு வருத்தத்துடன் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறான். எதிர் வீட்டு நண்பன் ஆறுமுகம் அவன் பக்கத்தில் வந்து உட்காருகிறான்.)

ஆறுமுகம்: என்னடா சோகமே உருவெடுத்து உட்கார்ந்திருக்கிறாய்? சினிமாவுக்குப் போக அப்பா காசு தரமாட்டேன் என்று சொன்னாரா? அல்லது அம்மா, டிபனுக்கு இட்டிலி சுட்டுத் தர மாட்டேன் என்று கூறினாளா?

கண்ணன்: நீ வேறு ஏண்டா வேதனையைக் கிளப்பறே?

ஆறு: அப்படி என்னடா வேதனை வந்துவிட்டது உனக்கு? சம்சார சாகரத்தில் அகப்பட்டு அலைந்து குலைந்து கடன் பட்டவன் மாதிரிப் பேசுகிறாயே? இப்படி வேதனையுடன் இருந்தால் உன் பொன்னான உடல் வைக்கோல் துரும்பாக இளைத்துவிடாதா?

கண்: உன் கேலி போதும். இந்த இடத்தை விட்டுப் போய்விடு. என்னைத் தொந்தரவு செய்யாதே.

ஆறு: என்ன விஷயம் என்று சொல்லித் தொலையேண்டா. எலும்பைப் பறிகொடுத்த நாய் மாதிரி உட்கார்ந்திருக்கிறாயே!

கண்: நானும் அதே நிலையில் தாண்டா இருக்கிறேன்.

ஆறு: (ஆச்சரியத்துடன்) அப்படி என்னத்தைப் பறிகொடுத்துட்டே? உன் சட்டைப் பித்தான் காணாமல் போய்விட்டதா? அல்லது....

கண்: (கோபத்துடன்) உன் மூளை காணாமல் போய்விட்டது. சொல்வதைக் கேள். ஒரு வாரத்துக்கு முன் என் மாமா ஊரிலிருந்து வந்தாரல்லவா? அவர் வாங்கி வந்த....

ஆறு: 'சாக்லெட்' பாக்கெட் தீர்ந்துவிட்டதா?

கண்: (எரிச்சலுடன்) சொல்வதைக் கேளேண்டா. புத்தம் புதிய 'பார்க்கர்' பேனா பரிசாகக் கொடுத்தார். அந்தப் பேனா இப்போது...

ஆறு: போதும், போதும். விஷயம் விளங்கிவிட்டது. இப்போது அந்தப் பேனா உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல், பிரிவு உபசாரம் பெற்றுக்கொண்டு விட்டது. அவ்வளவுதானே!

கண்: ஆமாண்டா. அப்பாவுக்குத் தெரிந்தால் முதுகுத் தோலை உரித்துவிடுவார்.

ஆறு: பெரிய விஷயம்தான் காணாமல் போய்விட்டது! இதற்குச் சாமானியமாக வருத்தப்படக் கூடாதே? நானாக இருந்தால் அழுதே விடுவேன். ஏண்டா, உன் வீட்டில் யாருக்காவது இந்த விஷயம் தெரியுமா?

கண்: ஒருவருக்கும் தெரியாது. இப்பொழுது சொல்லவேண்டாம் என்று இருக்கிறேன்.

ஆறு: உன் அப்பாவோ, அண்ணன் வாசுவோ கேட்டால் என்ன சொல்வாய்?

கண்: அப்போது வேறு காரணம் ஏதாவது சொல்லிக் கொள்ளலாம். நீயும் ஒருவரிடமும் சொல்லிவிடாதே! முக்கியமாக அண்ணன் வாசுவிடம் சொல்லிவிடாதே! மாமா, பேனாவை என்னிடம் கொடுத்தபோது அவனுக்குப் பொறாமை, தன்னிடம் கொடுக்கவில்லையே என்று. தெரிந்தால் அப்பாவிடம் சொல்லி, பெரிய விஷயமாக்கிவிடுவான்.

ஆறு: சரி; பக்கத்தில் கொட்டிக் கிடக்கும் மணல் மேட்டில் விளையாடினோமே! அங்கே போய்த் தேடலாம், வா.

(இருவரும் மணல் மேட்டை நோக்கிப் போகிறார்கள்.)

காட்சி - 2

(இவ்வளவையும் கதவின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கண்ணனின் அண்ணன் வாசு வெளியே வருகிறான்.)

வாசு: (தனக்குள்) வீட்டுக்குச் சொல்லாத அளவுக்கு வந்து விட்டதோ? பேனாவைக் கிணற்றடியில் போட்டுவிட்டு மணல் மேட்டில் தேடப் போகிறான், மடையன்! பேனா என் கையில் சிக்கிவிட்டது தெரியாது போலிருக்கிறது! 'கிணற்றடியில் தவறிப் போட்டிருப்பான், போனால் போகிறது' என்று இவனிடம் கொடுக்க வந்தால் என்னைப் பொறாமை பிடித்தவன் என்று கூறுகிறான். அயோக்கியன்! இதற்கு ஒரு வழி செய்கிறேன், அப்பாவிடம் சொல்லி.

(வாசு நேரே தன் அறைக்குச் சென்று அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தன் சலவைச் சட்டைகளுக்கு இடையே பேனாவை மறைத்து வைக்கிறான்.)

காட்சி - 3

(அப்பா சித்தான் நாற்காலியில் சாய்ந்து கொண்டுவெற்றிலைபோட்டுக் கொண்டிருக்கிறார். வாசு மெதுவாக அவரிடம் பேச்சை ஆரம்பிக்கிறான்.)

வாசு: உங்கள் அருமைப் புத்திரன் கண்ணனைப் பார்த்தீர்களா? அவன்...

அப்பா: அவனுக்கு என்னடா? நீ மட்டும் எருமைப் புத்திரனோ? எல்லாம் ஒரே வானரங்கள் தானே!

வாசு: கேலி போதும் அப்பா. விஷயத்தைக் கேட்டால் கூரைக்கும் தரைக்குமாகத் தாவுவீர்கள்.

அப்பா: ஏண்டா தடிப் பயலே, நானா தாவுவேன்?

வாசு: ஓகோ! உங்களால்தான் முடியாதா? சும்மா விளையாட்டுக்காகச் சொன்னேன். அவன் என்ன செய்திருக்கிறான், தெரியுமா? போனவாரம் மாமா கொடுத்த 'பார்க்கர்' பேனாவைத் தொலைத்து விட்டு ஒருவருக்கும் சொல்லக் கூடாதென்று திட்டம் வேறு தீட்டுகிறான். உங்களுக்குத் தெரிந்தால் அப்போது சமாளித்துக்கொள்வானாம்.

அப்பா: என்ன அநியாயம், குடும்பத் துரோகம். இழுத்து வா, அந்தக் கழுதையை! வைக்கோல் துரும்புக்கு இல்லை, இல்லை, விறகுக் கட்டைக்குச் சரியான வேலை கொடுக்கிறேன்.

அம்மா: (காது மந்தம்) எத்தனையோ பேர் வேலையில்லாமல் திண்டாடும்போது வைக்கோல் துரும்புக்கும் விறகுக் கட்டைக்கும் என்ன வேலை வேண்டியிருக்கு? வேலை இல்லாதவர்களுக்கு வேலை

கொடுத்தாலும் புண்ணியம் கிடைக்கும்.

அப்பா: (கோபத்துடன்) இருவாலறுந்த ஜன்மங்களைப் பெற்ற பெரிய வானரமே! சிறிது நேரம் பேசாமல் இரேன். அரைகுறையாகக் கேட்டுவிட்டு ஏன் உளறுகிறாய்? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி யார் பேசியது?

வாசு: வீணாகச் சத்தம் போடாதீர்கள், அப்பா. நல்ல வேளையாகப் பேனா என்னிடம் சிக்கிவிட்டது. புழக்கடையில் போக்கடித்துவிட்டு வாசலில் தேடுகிறான்! நான் அவனிடம் கொடுக்கலாம் என்றுதான் போனேன். பொறுமை பிடித்தவன் என்று என்னைக் கூறினான். பேனா தொலைந்ததை ஒருவரிடமும் சொல்வதில்லை என்றுகூடக் கூறினான். அதனால் பேனாவை அவனிடம் கொடுக்காமல் என்னுடைய சட்டைகளுக்கு அடியில் மறைத்து வைத்திருக்கிறேன்.

அப்பா: ஏண்டா, தடியா! அதை முன்னால் சொல்லித் தொலைப்பதற்கு என்ன? சிறிது நேரத்திற்குள் பதறிப் போய்விட்டேனே!

வாசு: அதற்குத்தான் மாமா பேனாவை அவனிடம் கொடுத்த போதே அதை என்னிடம் வாங்கிக் கொடுங்கள் என்று கூறினேன், இப்போது அது என்னிடம் கிடைத்திருக்காவிட்டால் . . .?

அப்பா: வரட்டும், அந்தக் கழுதை. ஒருவருக்கும் சொல்லக் கூடாது என்றிருக்கிறானா? அப்படியே நினைத்துக்கொண்டிருக் கட்டும். கஞ்சி காய்ச்சி விடுகிறேன் அவனை. இனிமேல் அந்தப் பேனாவை நீயே எடுத்துக்கொள். உனக்கே சொந்தம். அந்தக் கழுதை இனிமேல் இங்கிப் புட்டியையும் 'ஸ்டீல்' கட்டையையும் எடுத்துக்கொண்டு பள்ளிக்குப் போகட்டும். சட்டை முழுவதும் 'இங்கி'யைக் கொட்டிக்கொண்டு வந்து நின்றால்தான் சொரணை வரும். பேனாவைத் தொலைத்தது மல்லாமல் அதை மறைக்க முயன்ற குடும்பத் துரோகத்திற்காக இந்தத் தண்டனை அளிக்கப்பட்டது.

(வாசு, பேனா தனக்குச் சொந்தமாகிவிட்டது என்று மகிழ்ச்சியுடன் போகிறான்.)

காட்சி - 4

(மறுநாள் காலை. அப்பா சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். வாசு அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருக்கிறான். கண்ணன் நோட்டையும் பென்ஸிலையும் எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பிக்கிறான். அப்பா வாசுவை ஏறிட்டுப் பார்க்கிறார். வாசு தனக்குள் சிரித்துக்கொள்கிறான்.)

அப்பா: டேய் கண்ணா, உன் பேனாவை எடுத்துக்கொண்டு வாடா. உன் மாமாவுக்கு ஒரு லெட்டர் எழுதவேண்டும்.

கண்ணன்: இதோ, எடுத்து வருகிறேன், அப்பா.

(கண்ணன் உள்ளே சென்று சிறிது நேரங்கழித்து ஒரு பேனாவுடன் வருகிறான். பேனாவை அப்பாவிடம் கொடுக்கிறான். கண்ணனின் காணமற்போன பேனாமாதிரி இருப்பதைக் கண்ட வாசு 'திரு திரு'வென்று விழிக்கிறான்.)

அப்பா: (பேனாவை வாங்கி அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்துவிட்டு) ஏண்டா தடியா, பேனாவைத்தான் வைத்திருக்கிறானே. பேனா கிடைக்கவில்லை என்ற பொறுமையில் கதை கட்டிவிட்டாயா என்ன?

வாசு: (தடுமாற்றத்துடன்) ஹா! பேனாவா? இருங்கள் அப்பா . . இதோ . . வருகிறேன்.

(வாசு தன் அறைக்குச் சென்று சட்டைகளைப் புரட்டிப் பார்க்கிறான். பேனாவைக் காணோம். அதற்குப் பதிலாக ஒரு கடிதம் பறந்து விழுகிறது. வாசு படிக்கிறான்.)

''அன்புள்ள அண்ணாவுக்கு,

என்னுடைய பேனாவைப் பத்திரமாக எடுத்து வைத்திருந்து காப்



பாற்றித் தந்ததற்கு எனது மனமார்ந்த நன்றி. பேனு என் கைக்கு எப்படி வந்தது என்று ஆச்சரியப்படுகிறுயா? என்னுடைய மூன்று குற்றங்களினுல்தான்.

நான் பேனுவைத் தொலைத்தது முதல் குற்றம்!

நீ அப்பாவிடம் புகார் செய்ததை நான் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது இரண்டாவது குற்றம்!!

நான் உன் அறையிலிருந்து பேனுவை எடுத்துக்கொண்டது மூன்ருவது குற்றம். எப்படி!!!

என் பேனுவைப் பத்திரப் படுத்தி வைத்ததற்கு மீண்டும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இப்படிக்கு,
இக்கடிதத்தைப் படித்ததும் உன் கோபத்துக்கு ஆளாகப் போகும் அருமைத் தம்பி,
கண்ணன் ”

(வாசுவின் கையிலிருந்து கடிதம் நழுவிக் கீழே விழுகிறது. உள்ளே சென்றவன் இன்னும் காணேமே என்ற சந்தேகத்துடன் எழுந்து வந்து வாசுவின் அறைக்குள் நுழைந்த அப்பா மயங்கி விழுந்துகொண்டிருக்கும் வாசுவைத் தாங்கிப் பிடித்துக்கொள்கிருர். கீழே விழாதபடி.)

[திரை]

புத்தாண்டே வா வா வா!

மன்மத ஆண்டே போ போ போ!
மதிப்பில்லை உனக்கினி போ போ போ!
துன்முகி ஆண்டே வா வா வா!
துன்பம் நீக்கிட வா வா வா! (1)
தஞ்சை திருச்சி இடங்களிலே
தவித்தார் மக்கள் புயலாலே
வஞ்சக மன்மத ஆண்டே நீ
வாழ்வைக் கெடுத்தாய் போ போ போ! (2)
கஞ்சியும் கூழுங் கிடைத்தாலும்
கந்தலில் நல்லது கிடைத்தாலும்
பஞ்சமும் பிணியும் மறைந்திடவே
பரவச மாக நீ வா வா வா! (3)
பள்ளியில் படிக்கும் நாங்களெலாம்
பரீட்சையில் நன்கு தேறிடவும்
நல்லவர் என்னும் புகழ் பெறவும்
நன்மை செய்திட வா வா வா! (4)

—ர. தங்கவேலன்.

மிட்டாய் வண்டி

கிண்கிணி என்று மணியோசை
கேட்டதும் கூட்டம் சேர்ந்திடுதே!
வண்ண வண்ண மிட்டாய்கள்
வண்டியில் நிறைய இருந்திடுமே (1)
மணத்தில் சிறந்த பால்கோவா
மனத்தில் ஆசை ஊட்டிடுமே
பணத்தைக் கொடுத்தால் அவனிடத்தில்
பத்தும் இருபதும் கிடைத்திடுமே (2)
மிட்டாய் இருக்கும் தட்டினிலே
துட்டுச் சேர்ந்திட அம்மனிதன்
கட்டித் தொங்கிடும் மணியொன்றைக்
'கல கல' வென்றே அடித்திடுவான் (3)
இருளைப் போக்கச் சிறுவிளக்கே
இருக்கும் வண்டியின் மூலையிலே
குறும்பு செய்தால் விரட்டிடவே
கொம்பும் உண்டு வண்டியிலே. (4)

—தி. வி. அரிகிருஷ்ணன்.

பரிசு பெற்ற தொடர்கதை:

மண. அரங்கசாமி

ஸி.ஐ.டி சிங்காரம்

10

"அமுதா, அமுதா, உன்னைக் காலையிலே அடித்துவிட்டேன். அது என் தப்புதான். வேலை அதிகமாக இருக்கும்போது அதை முடிக்கவிடாமல் தொந்தரவு கொடுத்தாயே! ஆபீஸ் பொறுப்பு உனக்குத் தெரியாதா? ஆனால் நீ கேட்டது மட்டும் தப்பு என்று நான் சொல்லவில்லை! ஏதோ சிறுவர் வாங்கிப் படிக்கிற புத்தகம் வாங்கணும் என்று பணம் கேட்டாய்! இப்போ மாசக் கடைசி. பணத்துக்கு எங்கே போவது? இதெல்லாம் உனக்குத் தெரிந்த சங்கதிதானே?

"ஏதோ கோபத்தில் உன்னை அடித்துவிட்டேன். உன்னை எங்கெங்கே தேடுவது? வா, வீட்டுக்குப் போகலாம். அம்மாவும் சாந்தாவும் உன்னைக் காணுமல் ஏக்கமாக இருக்கிறுர்கள்!'' என்று கூறி அழுதார் சுவாமிநாதன்.

அவர் பேசுவதையே கண் கொட்டாமல் கவனித்து வந்த அந்தச் சிறுவன், "சார், என்ன சொல்கிறீர்கள்? யாரையோ தேடுவது போல் தெரிகிறது! நான் நீங்கள் தேடும் அமுதன் இல்லை!'' என்று கூறி நிறுத்தினுன். சந்திரனை அவ்வளவு நேரமும் மறைத்திருந்த முகில் கூட்டங்கள் சிறிது விலகின. சந்திரன் வெளியே வந்தான்.

"ஆ, நீ அமுதன் இல்லையா?'' என்று கேட்டவாறே அவன் முகத்தை நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தார். அவன் அமுதனல்ல! வேறு யாரோ! பாவம், அவர் மனம் என்ன பாடு பட்டிருக்கும், அவர் கால்கள் தள்ளாடின; கண்கள் இருளும் நிலைக்கு வந்துவிட்டன! மனச் சோர்வே மற்ற அவயவங்களுக்கும் சோர்வைக் கொடுத்தது. மனத்தின் பிரதிபலிப்புத்தானே ஒருவனது செய்கை!

அந்தச் சிறுவன் எதுவும் புரியாமல் திகைத்தான். அவரை மெல்ல அழைத்துக்கொண்டுபோய், கடற்கரையில் இருந்த சிமெண்டுப் பெஞ்சு ஒன்றில் உட்காரவைத்தான். காற்று, அருகில் இருந்த வேப்பமரத்தின் வழியாகப் புகுந்து வந்தது. 'ஜில்'லென்ற இளங்காற்று உடலுக்கும் அவர் உள்ளத்

திற்கும் இதமாக இருந்தது. சிறிது சிறிதாக அவர் மனம் தெளிவடையத் தொடங்கியது.

அந்தச் சிறுவனிடம் விடைபெற்றுக்கொண்ட சுவாமிநாதன் தள்ளாடித் தள்ளாடி வீட்டை நோக்கி நடந்தார். அமுதனின் வீடு வெறிச் சோடிக் கிடந்தது. வீட்டை அடைந்த அவர் 'உஸ்'ஸென்ற பெருமூச்சுடன் நாற்காலியில் அமர்ந்தார். ''அமுதன் கிடைத்தானா?'' என்று கேட்டாள் அவர் மனைவி. சாந்தா ஆவலோடு தன் தந்தையின் வாயைக் கவனித்தாள்.

''எங்கும் கிடைக்கவில்லை!'' என்று சுவாமிநாதன் கையை விரித்தார்.

* * *

இரவு மெல்ல மெல்லக் கடந்தது. சேவல் கூவியது. காகம் கரைந்து பொழுது விடிந்துவிட்டது என்று அறிவித்தது. எல்லோரும் தத்தம் காரியத்தைச் செய்ய ஆரம்பித்தனர். ஊரில் ஜன சந்தடி ஏற்பட்டுக் கலையுடன் திகழ்ந்தது. ஆனால் அமுதன் வீட்டில், இரவெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருந்த அமுதனின் அம்மா ஒரு மூலையில் சுருண்டபடி படுத்திருந்தாள். அவள் கண்களிலிருந்து இன்னும் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. மற்றொரு மூலையில் முடங்கிக் கிடந்த சாந்தாவின் கன்னத்தில் இரவு வழிந்த கண்ணீரின் கறை அழியாமல் காணப்பட்டது. அவளுக்கு அமுதனின் மீது அவ்வளவு அன்பு.

சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த அமுதனின் அப்பா ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தார். அவர் எண்ணம் முழுவதும் அமுதனின்மீதே பதிந்திருந்தது. அவர் மனம் அமைதி இழந்து தவித்தது. ஒரு மாதம் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே தங்கி விட்டார் சுவாமிநாதன். சாயங்கால வேளைகளில் வெளியே செல்வார்.

மன ஏக்கமே அமுதனின் அம்மாவைப் படுத்த படுக்கையில் கிடத்தி விட்டது. சாப்பாடு எட்டிக் காயாகக் கசந்தது. எந்நேரமும், ''அமுதா . . என் கண்ணே!'' என்ற முனகல்தான் அவள் வாயிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. என்ன வியாதி என்று டாக்டரால் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. ''இடமாற்றம்தான் இந்த மாதிரிக் கேஸ்களுக்கு மன நிம்மதியைக் கொடுக்கும்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார் டாக்டர்.

அவர் வேலை செய்துவந்த பாங்கின் கிளை ஆபீஸ் தஞ்சாவூரில் ஒன்று இருந்தது. ஆகவே ஆபீஸில் தனக்குத் தஞ்சாவூருக்கு மாற்றல் செய்துவிடும்படி தானே எழுதிக் கேட்டுக்கொண்டார்.

மறுநாளே ஒருவருக்கும் தெரியாமல் குடும்பத்துடன் தஞ்சைக்குப் பயணமாகிவிட்டார் சுவாமிநாதன். மறுநாள் வீடு பூட்டப்பட்டிருந்ததைத்தான் ஊரார் கண்டார்கள். எங்கே சென்றார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது!

11

ஐயாசாமி வீட்டின் குடும்ப டாக்டர் கிருஷ்ணா வீட்டினுள் வந்துகொண்டிருந்தார். திகிலுடன் இருந்த ஐயாசாமிக்குச் சற்றுத் தெம்பு வர ஆரம்பித்தது.

''நம்ம பையன் சுந்தரத்திற்குத்தான் உடம்பு சரியாக இல்லை. ஏதேதோ பிதற்றுகிறான். அர்த்தமில்லாமல் கூச்சல் போடுகிறான். விஷயம் என்னன்னு புரியல்லே!'' என்றார் கவலையுடன் ஐயாசாமி.

''எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டபடி ஹாலை விட்டு நகர்ந்தார். அப்போது சுந்தரமே அங்கே வந்துவிட்டான். வரும்போதே, ''ஐ ஸீ; நான் நெசம்மா நீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்தேன். வந்துட்டீங்களே. சரி, இவரை முதல்லே அரெஸ்ட் செய்யுங்க. என்ன சார் சும்மாப் பார்த்துகிட்டு நிக்கிறீங்க? பயமா இருக்குதா? சேச்சே, இந்த மாதிரித் துடை நடுங்கிப் பயலையெல்லாம் போலீஸ் இலாகாவிலே வேலைக்கு வெச்சு இருக்காங்களே!'' என்று சொல்லியபடியே டாக்டரின் அருகே வந்தான்.

''என்ன சுந்தரம், உடம்பை என்ன செய்யுது?'' என்றூர் டாக்டர்.

''என்ன செய்யுதா? ஒண்ணும் செய்யல்லே. ஆமா. அந்தச் சுந்தரம் என்கிற பையன் யாரு? அவன் ஏன் இங்கே வந்தான்? என் வெயிட் ஒன் நாட் நைன் பவுண்ட்! ஜஸ்ட் எக்ஸாமின், இப் யூ லைக்! உங்ககிட்டே எனக்கென்ன வேலை? அடடே! இதென்ன சார், சப் இன்ஸ்பெக்ட

ருக்கு டாக்டர் வேஷம்?'' என்று ஸ்டெதஸ்கோப்பைப் பிடித்து இழுத்தான்.

அதைத் திருப்பி வாங்க, பாவம், டாக்டர் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டார்! அவர் பிழைப்பே இப்ப டிப்பட்டதுதானே? பிறகு கைப் பெட்டியைத் திறந்து ஏதோ ஒரு மருந்தைக் 'கர்ச்சிப்'பில் தெளித் தார். பின்பு அதைச் சுந்தரத்திடம் கொடுத்து, ''இதை மோந்து பார், சுந்தரம். இந்த வாசனை ரோஜா அத்தரிலிருந்து தயாரித்தது'' என்று கூறினார்.

மூர்க்கத்தனமாக அந்தக் கைக் குட்டையைப் பிடுங்கிக்கொண்ட சுந்தரம் அதை மூக்கினருகில் பிடித்து நுகர்ந்து பார்த்தான். அவ்வளவுதான், மயக்கமாகக் கீழே சாய்ந்து விட்டான். டாக்டர் அதை எதிர்பார்த்ததால் சுந்த ரத்தைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டார். ஐயாசாமியும் சங்கரி அம்மாளும் இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பிறகு சமாளித்துக் கொண்டு டாக்டருக்கு உதவி செய்து, சுந்தரத்தைக் கட்டிலில் படுக்க வைத்தார் ஐயாசாமி.

''டாக்டர் சார், என் மகன் பிழைப்பானா, சார்? பைத்தியம் நீங்குமோ சார்?'' என்று பரிதாப மாகக் கேட்டார் ஐயாசாமி. கையில் ஊசி போட்டபடியே, ''இவனுக்குத் திடீர்னு, ஏதோ அதிர்ச்சி கொடுக்கக் கூடிய சம்ப வம் நடந்திருக்கிறது. அதைப் பார்த்ததால் மூளைபுரண்டுவிட்டது. இந்த ஊசிக்குக் குணமானால்தான் உண்டு. இல்லையானால் அதிர்ச்சி தரக்கூடிய சம்பவம் ஒன்றை மறு படியும் இவன் பார்த்தால் சரியாக லாம். நான் வேறு எதையும் செய்ய முடியாத நிலையிலே இருக் கிறேன்!'' என்று கூறி விடை பெற்றுக்கொண்டு சென்றார் அவர்.

''பணத்தைத் தண்ணீர்போலச் செலவழித்தும் பயன் எதுவும் ஏற் படாதுபோல இருக்கிறதே'' என்று கண்ணீர் உதிர்த்தார் ஐயாசாமி.

* * *

வருடங்கள் உருண்டோடின. தஞ்சையில் அமுதனின் குடும்பம் சற்று அமுதனை மறந்திருந்தது என்று கூறலாம். தஞ்சாவூரிலேயே பிரபலமாக இருந்த சாரதியின் சிகிச்சையின் மூலம் அமுதனின் தாயார் செல்வசுந்தரி குண மடைந்து படிப்படியாக நல்ல நிலைக்கு வந்தாள். பாசம் அவளை அலைய வைத்தது!

தினமும் பிரகதீசுவரர் சோவி லுக்குச் சென்று சாந்தாவும் செல்வ சுந்தரியும் அமுதன் நல்லபடியாகத் திரும்பிவர வேண்டும் என்று பிரார்த்தித்து வந்தார்கள்.

பண்டிகைகள் வரிசையாகப் படையெடுத்து வந்து மறைந்தன. அன்று தீபாவளி! சாந்தாவுக்காக வும் ஊராருக்காகவும் சுவாமி நாதன் பண்டிகை கொண்டாட ஏற்பாடு செய்தார். சாந்தா சிறுமி தானே? எண்ணெய் தேய்த்துக் கொண்டு புது ஆடைகள் அணிந்து, பட்டாசுக் கட்டுகளுடன் தெரு வுக்கு வந்தாள். பாதிப் பட்டாசு களைச் சுட்டு இருப்பாள். திடீ ரென்று அமுதனின் சோக உருவம் அவள் மனக் கண்முன் தோன்றி யது. கிழிந்த சட்டை; பறட்டைத் தலை; அழுக்கு ஏறிய உடலுடன் காணப்பட்டான் அமுதன்.

சாந்தா கண்களை இறுக மூடிக் கொண்டாள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய் மீதியிருந்த பட்டாசு களை வாரி எதிரே வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த ஏழைச் சிறுவர்களுக்குக் கொடுத்துவிட் டாள்.

பெற்றோர்களும் சாந்தாவின் நல்ல எண்ணத்திற்காகச் சந்தோ ஷப் பட்டார்கள். அதற்கு உதவி யும் செய்தனர். ஏழைகளுக்குப் பட்டாசு வழங்கி வந்ததன் மூலம் சாந்தா மனச் சாந்தியையும் சந் தோஷத்தையும் பெற்றாள். என் றாவது ஒரு நாள் தன் அண்ணன் அமுதன் வீட்டிற்குத் திரும்பி வரு வான் என்ற நம்பிக்கை மட்டும் அவளை விட்டு அகலவில்லை.

12

ரங்கராஜு தன் அறையில் உட்கார்ந்துகொண்டு புருவத்தை விரலால் வருடிக்கொண்டிருந்தார். பரங்கியூர் ஜமீன்தார் பரமசிவத்

தின் பங்களாவில் திருடர்கள் புகுந்து ஒரு லட்ச ரூபாய்க்குமேல் கொள்ளையடித்து விட்டனர் என்ற செய்தியைத் தாங்கி வந்தது டெலிபோன் அழைப்பு ஒன்று.

பங்களாவுக்குப் போன ரங்கராஜுவுக்குச் சாதகமாக எந்த விதத் துப்பும் கிடைக்கவில்லை! திருடியவன் மிகவும் சாமர்த்தியமாகத் திருடியிருந்தான். எதுவும் தகவல் கிடைக்காத ரங்கராஜு சோர்ந்த முகத்துடன் வீட்டிற்குத் திரும்பினர்.

அப்போது சிங்காரம் நீல நிறப் பாண்ட்டும்| அதற்கேற்ற புஷ் கோட்டும் அணிந்துகொண்டு உள்ளே நுழைந்தான். ரங்கராஜு மகிழ்ச்சியுடன், ''வாப்பா, வா! உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். பரங்கியூர் ஜமீன்தார் பரமசிவத்தின் பங்களாவில் கொள்ளை போய்விட்டதாம். அந்தக் கேஸை நீதான் கண்டுபிடிக்க வேண்டும். இதில் நான் பரிபூரணமாகத் தலையிட மாட்டேன்! என்ன?'' என்ருர்.

சிங்காரத்திற்கு உள்ளூறச் சந்தோஷமாக இருந்தபோதிலும் கூடவே ஒருவித அச்சமும் ஏற்பட்டது. ''என்ன சார், குருவியின் தலையிலே பனங்காயைச் சுமத்துவது போல என்மீது இவ்வளவு பெரிய காரியத்தைத் திணிக்கிறீர்களே! இதை என்ஞல் கண்டு பிடிக்க முடியுமா, சார்?'' என்ருன்.

''கவலைப்படாதே, உன் திறமை எனக்குத் தெரியும். இதில் ஈடுபடு!''

* * *

பாண்டியாக் கார் ஒன்று சத்தம் எதுவும் இல்லாமல் பரங்கியூர் ஜமீன்தார் பங்களாவின் முன்பு நின்றது. அதிலிருந்து சிங்காரமும் ரங்கராஜுவும் இறங்கினர்கள். வாசலில் நின்றுகொண்டிருந்த வேலைக்காரன் இருவரையும் மரியாதையாக அழைத்துக் கொண்டு போஞன்.

ஹாலில் சோகமே உருவாக மெத்தென்ற சோபாவில் உட்கார்ந்திருந்தார் பரமசிவம்.

உங்கள் போட்டோ தத்ரூபம் உங்கள் மாதிரியே இருக்கே! இதைப் பார்த்ததும் நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள் என்று நினைத்தேன். சரியாகப் போய்விட்டது.

—டாலி.

இருவரும் சிறிது நேரம் பரமசிவத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனல் சிங்காரம் மெல்ல, பரமசிவமும் ரங்கராஜுவும் பேசும்போது திருட்டு நடந்த அறைப் பக்கம் நழுவிவிட்டான். அறையை அலசி அலசி மூலை முடுக்குகளைக்கூட விடாமல் ஆராய்ந்தான். ஒருவிதமான துப்பும் கிடைக்கவில்லை.

முதலில் சிங்காரத்திடம் இருந்த சுறுசுறுப்பும் சந்தோஷமும் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தன. அப்போது மூலையில் கீழே கம்பளத்திற்கு ஓரத்தில் இருந்த ஒரு பொருள் அவன் கவனத்தை இழுத்தது! அருகில் சென்று குனிந்து அதை எடுத்துப் பார்த்தான். அது ஒரு திருப்புளி! மறைந்த புன்னகை அவன் முகத்தில் லேசாகப் படர்ந்தது. அதைக் கைகுட்டையால் மூடி எடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

''என்ன, சிங்காரம்! போகலாமா? ஏதாவது உபயோகமான

தகவல்கள் கிடைத்ததா?'' என்று கேட்டார் ரங்கராஜு.

''ஓ, போகலாம் சார்!'' என்று கூறினுன் சிங்காரம். பரமசிவத்திடம் இருவரும் விடைபெற்றுக் கொண்டார்கள்.

கார் சிங்காரத்தின் வீட்டை அடைந்தது. ரங்கராஜு சிங்காரத்தை இறக்கிவிட்டு, காரில் சென்றுவிட்டார். சிங்காரம் தன் ரகசிய அறைக்குச் சென்ருன். துப்பாகக் கிடைத்த திருப்புளியை மெதுவாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தான். கைப்பிடியில் 'நா' என்ற எழுத்து மறைந்தும் மறையாமலும் இருந்தது! கை ரேகையும் அதன் மீது படிந்திருந்தது.

குற்றம் செய்தவர்கள் பெயர் ஜாபிதாவை எடுத்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டான் சிங்காரம். அன்று மாலையே ஜமீன்தார் பங்களாவுக்குப் போய் மீதி விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்று எண்ணினுன்.

மாலை மணி ஐந்துக்குத் தோளில் காமிராவை மாட்டிக்கொண்டு, சிங்காரம் பங்களாவின் உள்ளே நுழைந்தவுடன் மரியாதையோடு அவனை வரவேற்ருர் பரமசிவம். அவருக்குச் சிங்காரத்தின் பணிவு வெகுவாகப் பிடித்துவிட்டது! ஆகவே தடங்கல் எதுவுமில்லாமல் அறையைப் பரிசோதிக்க அநுமதித்துவிட்டார். அறையை உன்னிப்பாகக் கவனித்தான் சிங்காரம். ரத்தின கம்பளத்தைத் தூக்கிப் பார்த்தான். அங்கே அடிக்கொரு முறை விட்டு விட்டு ரத்தம் சொட்டி, கெட்டிப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்துபோன சிங்காரம், ஓர் அலமாரியின் முன் வந்து நின்ருன். அலமாரி அடியில் மட்டும் ரத்தம் சொட்டியது காணப்பட்டதே ஒழிய, அதற்கு மேல் எந்த விதமான அடையாளத்தையும் காணவில்லை!

அலமாரியை ஆராய எண்ணினுன். அலமாரி பூட்டப்பட்டு இருந்தது. தலைப் பாகத்தில் அழகான பொன் எழுத்துக்களால் 'முருகா' என்று பொறிக்கப்பட்டிருந்தது! இடமிருந்து வலப்புறமாக ஒரு வேல்குறியும் வைக்கப்பட்டிருந்தது! இவையெல்லாம் சிங்காரத்தின் மூளையைக் குழப்பின.

சுவரிலும் அலமாரியிலும் எந்த விதமான சந்தேகத்திற்கான அறிகுறியும் காணப் படவில்லை. எழுத்துக்களை அப்படியும் இப்படியுமாக அசைத்தான். சிற்சில இடங்களில் மங்கலாகக் காணப்பட்ட எழுத்து அப்போது பளிச் சென்று தெளிவாகத் தெரிந்தது. கையில் பிசு பிசுவென்று எண்ணெய்ப் பசை ஒட்டியது.

வேல் குறி இருக்கும் பக்கமாக ஒவ்வோர் எழுத்தையும் அசைத்தான். அப்போது எதிர்பாராத விதமாக 'படீ'ரென்ற சத்தம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அலமாரி ஓசை யில்லாமல் சுவரை விட்டு மெல்ல நகர்ந்து, சுவரில் இடைவெளி காணப்பட்டது. அந்த இடைவெளியில் ஒரே மையிருட்டு. கையில் விளக்கில்லாமல் நுழைய முடியாது.

பரமசிவத்திடம் ஓடினுன். அவரிடம் எதுவும் கூருமல் ஒரு 'டார்ச்'லைட்டை மட்டும் வாங்கிக் கொண்டு அந்த அறையை அடைந்தான். அந்த வழியைப் பரிசோதித்துவிட்டு வெளியே வந்தான். பரமசிவம் அந்த அலமாரியினருகில் ஆச்சரியமே உருவமாக நின்றிருப்பதைப் பார்த்த சிங்காரம், ''ஏன் சார், இந்தப் பங்களாவை நீங்களே கட்டிக்கொண்டீர்களா?'' என்று கேட்டான்.

''இல்லை! இதை நான் ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கினேன். போன மாதந்தான் இதற்குக் குடி வந்தேன்!'' என்ருர். புதிய தெம்பும் மன நிறைவும் சிங்காரத்தின் முகத்தில் தோன்றின.

மேற்கொண்டு எதையுமே பேசாமல் சுரங்கம்போல இருந்த அந்த வழியிலே நுழைந்தான் சிங்காரம். சிங்காரம் தலை மறையும்வரை கவனித்துக்கொண்டிருந்த ஜமீன்தார் பரமசிவம், 'உ..ம்' என்று பெருமூச்செறிந்தார்.

(தொடரும்)

மனித சுபாவம்

சங்கரசுப்பு

இரவு எட்டரை மணியிருக்கும். நான் பக்கத்து வீட்டு நண்பரான ஸ்ரீமான் நரசிம்மன் அகத்தில் உட்கார்ந்து ரேடியோ கேட்டுக்கொண் டிருந்தேன். ரேடியோப் பெட்டிக்கு அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்து ஒரு தினசரியையும் படித்துக்கொண் டிருந்தேன். இந்த இரண்டு காரியங்களையும் ஒரே சமயத்தில் சாதிப்பது என்பது ஒரு கலைதான். ஆனால் எனக்கு இது மிகச் சுலபம்!

ரேடியோவில் யாரோ ஒருவர் எந்த நிலையத்திலிருந்தோ சுமாராகப் பாடிக்கொண் டிருந்தார்.

என் நண்பர் நரசிம்மன் நான் உட்கார்ந்த இடத்திற்குச் சற்றுத் தள்ளி, கீழே பாயில் உட்கார்ந்து கொண்டு தன் ஏழு வயதுப் பெண் விமலாவிற்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தார்.

''ஊம், ஜல்தி! கொடுத்திருக்கிற கெஜத்தை மைல், பர்லாங்கா மாற்றுவதற்கு என்ன பண்றது?''

''வகுக்கணும்.''

''எதனால்?''

''எட்டால்.''

''எட்டாலேயா? யோசித்துச் சொல்.''

''வந்து..வந்து..''

''சரி, இப்போ கெஜத்தை என்ன பண்ணணும்னு கேட்டிருக்கு?''

''மைல், பர்லாங்கா மாற்றணும்னு.''

''மைல். பெரிசா, பர்லாங் பெரிசா?''

''மைல்.''

''ஏன்?''

''எட்டு பர்லாங் கொண்டது ஒரு மைல்.''

''அதனால் கொடுத்திருக்கும் கெஜத்தை முதல்லே....''

''பர்லாங்கா மாற்றணும்.''

''மாற்ற என்ன செய்யணும்?''

''வகுக்கணும்.''

''எதனால்?''

''எட்டால்.''

''மறுபடியும் பாரேன்; எட்டாலா வகுக்கணும்?''

''இல்லேப்பா———''

''ஒரு பர்லாங்குக்கு எத்தனை கெஜம்?''

''வந்து..வந்து...''

''சூ, எத்தனை கெஜம் கொண்டது ஒரு பர்லாங்?''

''இருநூற்றிருபது.''

''அதனால் இப்போ கொடுத்திருக்கும் கெஜத்தை இருநூற்றிருபதால் வகுத்தால் என்ன கிடைக்கும்?''

''ஈவும் மிச்சமும்.''

''ஈவுன்னு என்ன, மிச்சம்னு என்ன?''

''ஈவு வந்து...''

''சொல்லேன். உனக்குத்தான் தெரியுமே! இவ்வளவு கெஜம் கொடுத்திருக்கு. அதை மைல், பர்லாங்கா மாற்றணும்னு சொல்லியிருக்கு....''

''முதல்லே கெஜத்தை பர்லாங்கா மாற்றணும். அதற்கு இருநூற்றிருபதால் வகுக்கணும்.''

''உம், வகுக்கணும்.''

''இருநூற்றிருபது கெஜம் கொண்டது ஒரு பர்லாங்.''

''ஹூம்... அப்படி! இருநூற்றிருபது கெஜம் கொண்டது ஒரு பர்லாங். கொடுத்திருக்கிற கெஜத்தை இருநூற்றிருபதால் வகுத்தால் என்ன கிடைக்கும்?''

''வந்து..அப்பா...''

''என்ன விமலா..? இது தெரியல்லே? பர்லாங் கிடைக்காதா?''

''ஆமாம், அப்பா.''

''சரி..வகு.''

''ஹூம்..வகுத்தாச்சு. ஐந்நூற்று அறுபது ஈவு வந்திருக்கு. மீதி ஒன்றும் இல்லை.''

''ஈவுன்னு என்னது? லட்டா, மைசூர்ப்பாகா, ஜிலேபியா?''

"ஐந்நூற்றறுபதுங்கறது 1,23,200 கெஜத்தை 220-ஆல் வகுத்ததில் கிடைத்தது."

"அதுதான் கிடைத்ததே, அவ்வளவு என்ன?"

விமலா விழித்தாள்.

"தெரியுமா, தெரியாதா?"

"தெரியாது, அப்பா."

"ஏன் தெரியாது? இத்துடன் எத்தனை தடவை சொல்லிக் கொடுத்திருக்கிறேன்? ஒரு தரம் சொல்லிக் கொடுத்துப் பிடிச்சுக்கலேன்னு, அது என்ன ஜன்மம்?" என்று ஆக்ரோஷத்துடன் கூறிக் கொண்டே புறங்கையால் மண்டையில் அடித்தார்.

அடித்த சப்தம் கேட்டு 'டபக்' என்று தலையை நிமிர்த்தினேன்.

அடுத்தடுத்து நாலைந்து. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் பெயர்தான் நரசிம்மன் என்று எனக்குத் தெரியுமே ஒழிய பெயருக்குப் பாந்தமாக இத்தனை கோபம் உண்டு என்று அதுவரை எனக்குத் தெரியாது.

நரசிம்மன் என்ற பெயர் இருந்துவிட்டால் கோபமும் கட்டாயம் இருந்துதான் ஆக வேண்டும் என்று உண்டோ? குழந்தை வலி பொறுக்காது அழுதாள். சாதாரண அடியா? யார் அடித்தாலும் அந்தப் பூஞ்சை சரீரம் தாங்காது. நரசிம்மன் நல்ல திடகாத்திரமான பேர்வழி. உடம்பின் அவயவங்கள் எல்லாம் பூரண உருவம் பெற்று அளவிற்கு மேலேயே பருமனாய் இருந்தன. அவர் விமலாவை அடித்த அடி என் மேல் விழுந்தது மாதிரி இருந்தது. அடியின் எதிரொலியையே என்னால் தாங்க முடியவில்லை. குழந்தை அந்த அடியை எப்படித்தான் தாங்கினாளோ! பாவம்! நரசிம்மன் தொடர்ந்தார்.

"ஹூம்... அப்புறம் அடித்ததற்கு அழலாம். இப்போ இங்கே சொல்லு."

நான் குறுக்கே பேசினேன். சம்மன் இல்லாத ஆஜர்தான்.

"என்ன ஸார், அப்படி? அவளுக்குத் தூக்கம் வந்துவிட்டது போலிருக்கு. நாளைக்குப் போடுவாள் கணக்கை. விமலா சமர்த்துன்னு!" என்று நாசூக்காகச் சொன்னேன்.

"நீங்கள் பேசாமலிருங்கள், ஸார். பரிந்து பேசினால் ஒன்றும் ஏறாது. மணி எட்டரை ஆகல்லே, அதற்குள் தூக்கம் வந்துவிடுமோ? மொட்டை மாடியிலே போய் பகல் இல்லை, ராத்திரி இல்லை; இரண்டு வேளையிலும் போய் குதிக்கச் சொல்லுங்கள், ரெடி!"

"ஏய் விமலா, போட்டயா? வந்திருக்கிற ஈவு 560 என்ன?"

"பர்லாங்."

"அதை என்ன பண்ணணும்?"

"என்ன பண்ணனும்னு, தெரியல்லை."

"மைல் ஆக்கணும்னு கணக்கிலே கேட்டிருக்கோன்னோ?"



''ஆமாம், அப்பா'' என்றாள், விக்கலுடன் தலையைத் தடவிக் கொண்டே.

''அப்புறம் ஏன் தெரியாது? பர்லாங்கை மைலாகப் பண்ண என்ன செய்யனும்?''

''220-ஆல் வகுக்கணும்''

''என்ன?''

மறுபடி கன்னத்தில் அறைந்தார். விமலா, அவர் அறைந்த கையை எடுப்பதற்கு முன்னரே தன் கையால் கன்னத்தைத் தடவினாள். அறை அவ்வளவு வேகமாக விழுந்துவிட்டது.

''இவளை அஞ்சாம் கிளாஸிலே சேர்க்கணுமாம், அஞ்சாம் கிளாஸில்; அரிச்சுவடிக்கு லாயக்கில்லை. அதற்கும் கீழேதான் ஒரு வகுப்பு ஏற்படுத்தி அதில் சேர்க்கணும். பர்லாங்கை மைலாக மாற்றுவதற்கு என்ன பண்ணணும்?''

விமலா பேசாது விக்கிக்கொண்டிருந்தாள். 'நன்றாயிருக்கிறது கணக்குச் சொல்லித் தரும் லட்சணம்' என்று நான் வியந்தேன், இப்படிச் சொல்லிக்கொடுத்தால், அடி பயத்தில், தெரிந்திருப்பதும் மறந்துபோய்விடும். பாடத்தைப் புகட்ட அடி உதவுமா?

''கேட்டதுக்குப் பதில் சொல்லாமல் என்ன அழுகை?''

மறுபடி அவள் பேசாமலே அழுதாள்.

''தெரியுமா, தெரியாதா?''

'தெரியாது' என்று சொன்னால் 'ஏன் தெரியாது?' என்று கேள்வியுடன் அறையும் விழுமே. என்ன செய்வதென்று எண்ணினாளோ என்னவோ. ''தெரியும், இப்போ மறந்து போயிடுத்து'' என்றாள் குழந்தை.

''எப்படி மறக்கும்? எங்கே நீட்டளவை வாய்பாட்டைச் சொல்லு. 12 அங்குலம் கொண்டது..?''

''ஒரு கெஜம்.''

''12 அங்குலம் கொண்டது என்ன?''

''ஒரு கெஜம்.'' மறுமுறையும் அவள் கெஜம் என்று சொல்லப்போவதை எதிர்பார்த்தவர்போல் அவள், ''ஒரு..''என்று ஆரம்பிக்கும் முன்பே ஓர் அறை அறைந்தார்.

''சொல்லு,12 அங்குலம் கொண்டது..?''

''ஒரு அடி''

''ஹூம்..அப்படி! முதுகிலே அடி விழுந்தால்தானே 12 அங்குலம் ஒரு அடிங்கிறது தெரியறது.ஹூம்--''

''மூன்று அடி கொண்டது, ஒரு கெஜம்..''

''ஹூம்......அப்படித்தான். நீதான் ரைட்டா சொல்றயே......உனக்குத்தான் தெரியறதே. ஹூம்..''

''எட்டு பர்லாங் கொண்டது ஒரு மைல்.''

''சரி, 3 அடி ஒரு கெஜம். அதற்கப்புறம்..?''

''நடுவிலே ஒண்ணு இருக்கு அப்பா...''

''என்ன இருக்கு? சொல்லு.''

''வந்து...''

''220 கெஜம் கொண்டது ஒரு...''

''ஒரு...''

''பர்லாங்.''

''ஆமாம்...ஒரு பர்லாங்.''

''ஹூம், அப்புறம்?''

''எட்டு மைல் கொண்டது ஒரு பர்லாங்'' மறுபடி கையால் தலையில் குட்டினார்.

''எட்டு மைல் கொண்டது ஒரு பர்லாங்கா?''

''இல்லேப்பா.''

''இல்லேன்னு, பின்ன என்ன?''

''எட்டு பர்லாங் கொண்டது ஒரு மைல்.''

''ஹூம்....''

''இப்போ 560 பர்லாங்கை மைல் ஆக்கறதுக்கு என்ன பண்ணனும்?''

''எட்டால் வகுக்கணும்.''

''அப்பா! ஹூம்..வகு.'' குழந்தை அழுகையுடனே கணக்கைப் போடவாரம்பித்தாள். எனக்குப் பரிதாபமாயிருந்தது. பார்வை பேப்பரில் இருந்தாலும் கவனம் முழுவதும் நரசிம்மன் தம் பெண்ணிற்குக் கணக்குச் சொல்லித் தரும் விதரணையில் தான் லயித்திருந்தது.

விமலா கணக்கைப் போட்டுக் காண்பித்தாள். அதை வாங்கிப் பார்த்து விட்டு, ''சரி...நோட்டில் இரண்டு கணக்கு எழுதித் தர்றேன். அதைப் போட்டுவிட்டுப் படுத்துக்கொள்'' என்றார்.

''சரி'' என்றாள் விமலா. சிரத்தையில்லாமல் கணக்கை எழுதி நோட்டைக் கொடுத்தார்.

''விமலி..தூக்கம் வர்றதா?''

''இல்லே....''

''பின்னே, ஏன் அழுது வழியறே?''

விமலா பதில் சொல்லவில்லை. கண் காது தெரியாமல் அடித்துவிட்டு, ''ஏன் அழறே?'' என்று கேட்கும் கேள்வி எனக்கே புரியவில்லை. எனக்கே புரியாதபோது அதைப் புரிந்துகொண்டு குழந்தை என்ன பதில் சொல்லப் போகிறாள்!''

இரண்டு கணக்குகளையும் போட்டுவிட்டு நோட்டைத் தன் தகப்பனாரிடம் நீட்டினாள். கணக்கைச் சரி பார்த்துவிட்டு, ''ஹூம்..போ..நோட்டை மூடி வைத்துவிட்டு மூஞ்சியை அலம்பிண்டு படுத்துக்கொள்'' என்ற பின் நரசிம்மன் வெகு நாழியாக இப்படிச் சொல்ல மாட்டாரா என்று ஏங்கி எதிர்பார்த்தவள் போல் விமலா உடனே எழுந்து, நோட்டை மூடி வைத்துவிட்டு, முகத்தை துடைத்துக்கொண்டு படுக்கப் போனாள். அவள் முகம் செக்கர் படர்ந்து வீங்கியிருந்தது.

மணி ஒன்பதாகிவிட்டது.

''ஸார்..ரேடியோவை மூடிவிடுங்கள்..நியூஸ் இருக்கே, அது பெரிய நியூஸென்ஸ்.''

''ஆமாம், ஆமாம்.. அவன் சொல்றது பேப்பரில் வரப்போறது தானே! பேப்பரில் வர்றதைத்தான் ரேடியோக்காரனும் சொல்றான்... ஆமா, இதைப் படிச்சேளா?''

''எதை?.''

''இதோ கேளுங்கள். சில தினங்கள் முன்பு சௌத்ஹாம்டன்லே ஒருத்தன், தன் பிள்ளை பள்ளிக்கூடப் பரீட்சையிலே குறைந்த மார்க்கு வாங்கினான் என்று கோபம் கொண்டு கண், காது தெரியாமல் அடிச்சுவிட்டானும். அவன் அடித்ததில் அடி இசைவு கெட்டு கண்ணில் விழுந்துவிட்டதாம். கை நகம் கண்ணில் பட்டு ரத்தம் வழிந்ததாம். பிறகு ஆபரேஷன் செய்ய நேர்ந்து ஒரு கண் போய்விட்டதாம்; சே! என்ன மனுஷன்! மிருகம்'' என்றேன்.

''இதுகளும் அப்படித்தான் பண்றது, பாருங்களேன்.''

''அது சரி, அதற்காக என்ன அப்படியா அடிக்கிறது? பரீட்சையிலே குறைச்சலா மார்க்கு வாங்கினா, என்ன லோகமே போயிடுமா?''

நரசிம்மன் பதில் சொல்லவில்லை.

''சரி, ஸார். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் பக்கத்து அறையில் உட்கார்ந்து பேப்பர் படிக்கிறேன்.''

''சரி, போகும்பொழுது சொல்லிக்கொண்டு போங்கள்.''

அந்த அறை விளக்கை அணைத்துவிட்டு அதற்கு எதிர்த்த அறைக்கு



வந்து பேப்பர் படிக்க ஆரம்பித்தேன்.

''விமலி...விமலி... விமலி!'' குரல்கேட்டது. சாடையாகப் பார்வையை எதிர் அறையில் வீசினேன். நரசிம்மன்தான் மெதுவாகக் கூப்பிட்டார். என் காதில் பட்டுவிடக் கூடாதே என்ற கவலையோடு தாழ்ந்த தொனியில் கூப்பிட்டார் போலும்!

''ஹூம்..'' என்று விமலி மெதுவாகப் பதில் சொன்னாள்.

''இங்கே....வா!''

மௌனம்.

''விமலி.... இங்கே வான்னு சொல்றேன்'' என்று அதட்டினாற் போல் சொன்னார். படுத்திருந்த விமலா எழுந்தாள்.

''என்ன அப்பா?''

''இங்கே வா. இங்கே படுத்துக்கோ, என் பக்கத்திலே.''

அடக்கமாக வந்து அவள் படுத்துக்கொண்டாள்.

நான் இருந்த அறையை நோக்கி, தலைதூக்கி நான் பார்க்கிறேனா இல்லையா என்று பார்த்துவிட்டுத் தம் பக்கத்தில் சற்றுத் தள்ளிப் படுத்திருந்த விமலாவை அருகில் இழுத்து அணைத்துக்கொண்டு, ''ஏன் விமலா, இந்தக் கணக்கெல்லாம் உனக்குத் தெரியலை?'' என்று கேட்டார்.

அவள் பேசவில்லை.

அவள் தலையைச் செல்லமாகக் கோதிக்கொண்டே, ''விமலி, ஏன், உனக்கு மறந்துபோயிடறதா? உனக்கு எத்தனை தடவை சொல்லிக்கொடுத்திருக்கேன்?....ஹூம், இனிமே மறக்கப்படாது; என்ன?'' என்றார்.

''ஹூம்'' என்றாள் விமலி.

''நீ ஏன் தப்பா சொன்னே? அதனாலேதான் அடிச்சேன். இனிமே நான் அடிக்க மாட்டேன். நீயும் தப்பா சொல்லமாட்டே இல்லையா?''

''..........''

''ஆமாம், தலையிலே பலமா பட்டுடுத்தா? வலிக்கிறதா? யார் அடிச்சா? நம்ப அப்பாதானே அடிச்சார்! இந்தா, அப்பாவை அடிச்சுடு'' என்று விமலாவின் கையை எடுத்து, தம் தலையில் அடித்துக்கொண்டார்.

விமலா மெதுவாகக் கண்களை மூடினாள். நரசிம்மனும் பெரிய பாரம் ஒன்று நீங்கியதுபோல் 'உஸ்' என்று ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டார்.

இதுதான் சமயமென்று நான் நாற்காலியைவிட்டு எழுந்து, ''ஸார்..நான் பேப்பர் பார்த்தாகிவிட்டது. போய் வருகிறேன்'' என்றேன்.

''ஹூம்..சரி'' என்று எழுந்து என்னை வழி அனுப்பிவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டார் நரசிம்மன்.

பேப்பரில் வந்ததுபோல் ஒரு செய்தியைப் புனைந்து நரசிம்மன் மனத்தில் இரக்கம் எழச் செய்துவிட்டேன் என்று சந்தோஷத்துடன் நான் என் வீட்டிற்குள் நுழைந்தேன்.

கோவூர் கிழார்

கி. வா. ஜகந்நாதன்

திருக்கோவலூர் என்று ஓர் ஊர் திருவண்ணாமலைக்குப் போகிற வழியில் இருக்கிறது. பழைய காலத்தில் அது ஒரு சிறிய நாட்டுக்குத் தலைநகராக இருந்தது. காரி என்ற வள்ளல் அதற்குத் தலைவனாக விளங்கினான். அந்த நாட்டுக்கு மலையமான் நாடு என்று பெயர். மலையமான் என்பது அதை ஆளும் தலைவனுக்குப் பெயர். காரியை மலையமான் திருமுடிக்காரி என்று சொல்வார்கள்.

அவனுக்கு உள்ளது சிறிய நாடுதான்; ஆனாலும் சேர சோழ பாண்டிய நாட்டுப் பொருளெல்லாம் அவனைத் தேடிவரும். எப்படி என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்.

காரி பெரிய வீரன். அவனிடம்

மிகவும் பலசாலிகளான வீரர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் யாவருமே காரியின் சொல்லை மீறாதவர்கள். அந்தப் படை எங்கே போர் செய்யப் போனாலும் வெற்றிதான்.

காரிக்குப் பகைவர் யாரும் இல்லை. ஆனாலும் அவன் அடிக்கடி தன் படையுடன் போரில் ஈடுபட்டிருப்பான். சேர சோழ பாண்டியர்கள் எப்போதேனும் யாருடனாவது போர் செய்ய வேண்டியிருந்தால், தங்கள் கட்சியிலிருந்து உதவி செய்ய வேண்டும் என்று காரியை வேண்டிக்கொள்வார்கள். அவன் தன் படையுடன் சென்று அவர்களுடைய படையுடன் சேர்ந்து போர் செய்வான். நிச்சயமாக அவன் சேர்ந்திருக்கும் கட்சிக்குத்தான் வெற்றி உண்டாகும். இந்த உண்மையைத் தமிழ் நாட்டு அரசர்கள் யாவரும் உணர்ந்திருந்தார்கள். போர் முடிந்து வெற்றி பெற்றபிறகு தமக்கு அந்த வெற்றியை வாங்கித் தந்த பெருவீரனாகிய மலையமானுக்கு, அவன் உதவியைப் பெற்ற அரசன் பொன்னும் பொருளும் யானையும் குதிரையும் தேரும் வழங்குவான். பகைவரிடமிருந்து பெற்ற பொருளிலும் பங்கு கொடுப்பான். மலையமான் பெரிய அரசனைப் போன்ற செல்வத்தோடு



வாழும் அளவுக்கு அவனுக்குப் பொருள் கிடைத்தது.

ஆனல் அவன் என்ன செய்தான் தெரியுமா? தமிழ்ப் புலவர்களிடத்திலும் இசைவாணர்களிடத்திலும் அவனுக்கு அளவற்ற அன்பு, அவன் போர்செய்யாத காலமெல்லாம் புலவர்களோடு இருந்து பொழுது போக்குவான். அவர்களுடைய கவிகளைக் கேட்டு மகிழ்வான். பொன்னை வாரி வழங்குவான். யானை, குதிரை, தேர் ஆகியவற்றைக் கொடுப்பான்.

மலையமான் திருமுடிக்காரியின் துணையைப் பெருத அரசர்கள் அவன் பெயரைக் கேட்டாலே நடுங்குவார்கள். அக்காலத்தில் உறையூரில் இருந்து அரசு செலுத்திய சோழனுக்குக் கிள்ளி வளவன் என்று பெயர். அவன் ஓரிரண்டு சமயங்களில் மலையமானுடைய உதவியைப் பெற நினைத்தான். அவனல் பெற முடியவில்லை. அதனல் அவனுக்குக் காரியினிடம் கோபம் உண்டாயிற்று. அந்தக் கோபம் காரியை என்ன செய்ய முடியும்?

திருமுடிக்காரி இறந்துவிட்டான். அந்தச் செய்தியைக் கேட்டுத் துடி துடித்துப் போனர்கள் புலவர்கள். தன்னுடைய வீரத்தால் புலமையை வளர்த்த பெருமான் அல்லவா அவன்? புலவர்களுக்கு உதவி புரியாத மன்னர்களிடமும் படையை உதவிப் பொருள் பெற்றுப் புலவர்களுக்கு ஈந்த வள்ளல் அவன். அவனல் பல போர்களில் வெற்றி பெற்ற மன்னர்களும் அவன் மறைவை அறிந்து துயரடைந்தார்கள்.

இத்தனை பேர்களுக்கிடையே, ''மலையமான் தொலைந்தான்'' என்று மகிழ்ச்சி அடைந்தவர்களும் இருந்தார்கள். அவர்களில் கிள்ளி வளவனும் ஒருவன். ''இனிமேல் மலையமானுடைய படை நம்மை எதிர்த்தால் என்ன செய்வது என்ற ஏக்கம் எந்த அரசருக்கும் உண்டாகாது. அவரவர்களுடைய சொந்த வீரத்துக்குத் தக்கபடி வெற்றி தோல்வி அமையும்'' என்று சொல்லி மகிழ்ந்தான்.

''அவனுக்குக் குழந்தை குட்டிகள் உண்டோ?'' என்று விசாரித்தான் வளவன்.

''இரண்டு பிள்ளைகள் இருக்கிருர்கள்'' என்று அமைச்சன் ஒருவன் சொன்னன்.

''அப்படியா? அந்தப் பாம்புக்குக் குட்டிகளும் இருக்கின்றனவா?'' என்ருன்; அவன் குரலில் வன்மை குறைந்தது.

அன்று முதல் அவன் உள்ளத்தில் பொல்லாத எண்ணம் ஒன்று முளையிட்டது. 'எப்படியாவது அந்தப் பிள்ளைகளையும் தகப்பனர் போன இடத்துக்கே அனுப்பிவிட வேண்டும்' என்ற எண்ணந்தான் அது. அவர்கள் இருவரும் குழந்தைப் பருவம் தாண்டாதவர்கள் என்பதை அறிந்தும் அவன் மனத்தில் பதிந்திருந்த பகையுணர்ச்சி போகவில்லை. ''குழந்தைகளாக இருந்தால் என்ன? முள் மரத்தை இளஞ் செடியாக இருக்கும்போதே களைந்து எறிவதுதான் நல்லது'' என்று கிள்ளிவளவன் சொன்னன்.

அந்தச் சின்னஞ் சிறு பாலகர்களை எப்படியோ பற்றிக்கொண்டு வந்துவிட்டார்கள் முரடர்கள். கிள்ளி வளவனிடம் பரிசுபெறச் செய்த வேலை.

''அக்குழந்தைகள் இருவரையும் யானைக்காலில் இடறி விடுங்கள்'' என்று உத்தரவிட்டான் கொடு மனம் படைத்த கிள்ளிவளவன்.

இந்தச் செய்தி எப்படியோ நாட்டு மக்களுக்குத் தெரிந்துவிட்டது. காரியினிடம் யாவருக்கும் அன்பு இருந்தது. இளங் குழந்தைகளைக் கொல்வது முறையாகாது என்று அரசனேடு நெருங்கிப் பழகுகிறவர்கள் எடுத்துரைத்தார்கள். அவன் இரங்கவில்லை.

குழந்தைகளைக் கொல்ல நாள் குறித்தாயிற்று. கொலை செய்யும் யானையும் வந்துவிட்டது. புலவர் உலகத்திலும் இந்தச் செய்தி மெல்லப் பரவியது. எல்லோரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தனர்.

சோழமண்டலத்தில் உள்ள ஊரில் கோவூர் என்று ஒரு பெரும் புலவர் வாழ்ந்து வந்தார். புலவர்கள் யாவரும் மதிக்கும் மாட்சி

பெற்றவர் அவர். முடியுடைய மன்னர்கள் வணங்கும் தகுதி பெற்றவர். அவர் வந்து வளவனுக்கு நல்லுரை கூறினால் ஒருகால் அந்த இளங்குழந்தைகள் உயிர் பிழைக்கும் என்ற எண்ணம் புலவர்களுக்கு உண்டாயிற்று. சில புலவர்கள் இந்தக் கொடுமையைக் கோவூர்கிழாரிடம் போய்ச் சொன்னார்கள். ''நம் காரியின் குழந்தைகளையா கொல்லப் போகிறான்!'' என்று திடுக்கிட்டவராய் அவர் உடனே புறப்பட்டு விட்டார்.

இங்கே, கொலைக்களத்துக்குக் குழந்தைகளைக் கொண்டு சென்றனர். யானையைக் கொண்டுவர ஏற்பாடாகி விட்டது. மக்கள் அங்கங்கே கூடிக் கூடி, ''மகா பாவி! எதற்கும் அஞ்சாத கொடியவன்'' என்று சோழனைத் தூற்றிக் கொண்டிருந்தனர்.

''கோவூர் கிழாருக்கு இந்தச் செய்தி போயிருக்கிறதாமே! அவர் வந்தால் சோழன் தன் மிடுக்கைத் தளர்த்துவான்'' என்றார் சிலர்.

''அவர் ஊரில் இருந்து, சமயத்துக்கு வர வேண்டுமே!'' என்று சிலர் சந்தேகத்தை எழுப்பினர்.

''அவர் வந்தால்தான் என்ன செய்வது? இந்த முரடன் இரங்குவானா?'' என்று ஒருவர் கேட்டார்.

''என்ன அப்படிச் சொல்கிறீர்? கோவூர் கிழாராலே சாதிக்க முடியாத காரியமும் உண்டு. இந்தக் குழந்தைகளின் தலைச் சுழி நன்றாக இருந்தால் அவர் வருவார்'' என்றார் மற்றொருவர்.

அப்போது புதிய ஆரவாரம் ஒன்று எழுந்தது. ''வந்து விட்டார்; வந்து விட்டார்'' என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். கோவூர் கிழாரே வந்துவிட்டார். அவர் முதலில் அரசனிடம் போகவில்லை. நேரே கொலைக்களத்துக்குச் சென்றார். அங்கே குழந்தைகள் இரண்டும் அழுதுகொண் டிருந்தன. அப்போதுதான் யானையையும் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதைப் பார்த்த குழந்தைகள் சிறிது நேரம் அழுகையை நிறுத்தி வேடிக்கை பார்த்தன. தம்மைக் கொல்ல வந்த யானை என்று தெரிந்து கொள்ளாமல் அழுகையை நிறுத்திப் பார்க்கிறார்கள் என்பதைக் கவனித்தபோது கோவூர் கிழாருக்கு அழுகை வந்தது. அவர் தம் கண்ணைத் துடைத்துக் கொண்டார். குழந்தைகளிடம் போனார். அருகில் அவர்களுக்குக் காவலாக நின்றுகொண் டிருந்த அதிகாரியைப் பார்த்தார். ''உங்கள் வேலையைச் சிறிது நேரம் நிறுத்தி வையுங்கள். நான் மன்னனிடம் சென்று மீண்டும் வந்து சொல்கிறேன்'' என்றார்.

புலவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் தமிழ் நாட்டில் பிறந்தவன் அல்லவா அந்த அதிகாரி? கோவூர் கிழார் முடியுடை மன்னர் போற்றும் பெருமையை உடையவர் என்பதை அவன் அறிவான். அவன் ஒப்புக் கொண்டான்.

உடனே புலவர் கிள்ளிவளவனை நோக்கிச் சென்றார். அவன் தன் அரண்மனையின் மேல் மாடத்தில் நின்றுகொண் டிருந்தான். கோவூர் கிழார் வேகமாகச் சென்று அவன் முன் நின்றார். வந்த வேகத்தினால் அவர் பெருமூச்சு விட்டபடியே நின்றார்.

அவரைக் கண்டவுடன் கிள்ளிவளவன் எழுந்து வரவேற்றான்: ''மிக விரைவாக மூச்சு வாங்கும்படி வந்திருக்கிறீர்களே! சொல்லி அனுப்பவில்லையே! உட்காருங்கள்'' என்றான்.

''மூச்சு வாங்கும்படி நீதான் செய்தாய். எனக்கு உட்கார நேரம் இல்லை. உன்னிடம் சில செய்திகளைச் சொல்ல வந்தேன்.''

''என்ன அவசரமான காரியம்?''

''ஆம்; தலைபோகிற காரியம் இது. சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்'' என்றான் அரசன்.

''இளங் குழந்தைகள் இருவரை நீ கொலைபுரியப் போவதாக நான் கேள்வியுற்றேன். 'அது நியாயமா' என்று கேட்கத்தான் வந்திருக்கிறேன்'' என்று படபடப்புடன் கூறினார் புலவர்,

''அவர்கள் இருவரும் மலையமான் பிள்ளைகள். அரசர்களையெல்லாம் நடுங்கச் செய்த கொடியவனுடைய பிள்ளைகள். பெரியவர்களானால் அவனைப்

போலவே கொடுமை புரிவார்கள். அப்போது அடக்குவதைவிட இப்போதே ஒழித்துவிடலாம் என்று எண்ணினேன்'' என்றான் அரசன்.

''அரசே, மலையமானைக் கொடியவன் என்றா சொல்கிறாய்? இன்று தமிழுலகம் முழுவதும் அவனைப் போற்றுகிறது. அவன் உனக்கு என்ன தீங்கு செய்தான்? இந்தக் குழந்தைகள் உனக்கு என்ன தவறு செய்து விட்டார்கள்? பாலைவனத்தில் வழியே போகிறவர்களை இரக்கம் இல்லாமல் கொல்லும் வேடன் செய்யும் செயலல்லவா இது? உன்னுடைய மரபைப்பற்றிச் சிந்தித்தாயா? சிபிச் சக்கரவர்த்தியின் வமிசம் என்றல்லவா உன் மெய்க் கீர்த்தி சொல்கிறது? அந்தச் சிபி என்ன செய்தான் என்பதைச் சற்றே நினைந்து பார். ஒரு புறாவைக் காப்பாற்றுவதற்காகத் தன் சதையை அரிந்து கொடுத்தான். தானே தராசில் ஏறி நின்றான். அவனுடைய மரபில் வந்த நீயா இந்தக் கொலை பாதகத்தைச் செய்யத் துணிந்தாய்?'' கோவூர் கிழார் சிறிதே நிறுத்தினார்.

கிள்ளி வளவன் நெற்றியில் வேர்வைத் துளிகள் புறப்பட்டன. அவற்றைத் தன் கையால் துடைத்துக் கொண்டான். ஒன்றும் பேசாமல் இருந்தான். மறுபடியும் கோவூர் கிழார் சொல்லலானார்.

''இவர்கள் யார் தெரியுமா? என்னைப் போலத் தம்முடைய புலமையையே விவசாயமாகக் கொண்டு வயிறு பிழைக்கிறவர்களுடைய துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்றுக்கொண்ட வள்ளலினுடைய குழந்தைகள். தனக்குக் கிடைத்தவை எல்லாவற்றையும் புலவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களுடைய நெஞ்சிலும் நாவிலும் பாவிலும் வாழ்கிறவனுடைய குழந்தைகள். பச்சிளம் பாலகர்கள். இவர்களைக் காப்பாற்ற வேண்டியது நல்லோர் கடமை. அப்படி இருக்க, இவர்களைக் கொல்லத் துணிந்தாய். நான் கொலைக்களத்துக்கு இப்போதுதான் போய்விட்டு வருகிறேன். அங்கே கண்ட காட்சி என் உள்ளத்தை உருக்கிவிட்டது. வந்த அழுகையைத் தடுத்துக் கொண்டேன்.''

இங்கே சற்று நிறுத்தினார். மன்னன் சற்றுக் கூர்ந்து கவனித்தான். அவன் முகத்தில் நிழல் படர்ந்தது. ''அந்த இரண்டு இளங் குருத்துக்களும் அழுது கொண்டிருந்தன. தம் உயிரை வாங்கப் போகிறார்கள் என்று அல்ல. அவர்களுக்கு அது தெரியாது. புதிய இடம், புதிய மனிதர்கள், ஆகையால் அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் உயிரை வாங்கும் யானை முன்னே வந்து நின்றது. அதைக் கண்டவுடன் சிறிது அழுகை நின்றது. யானையைக் கண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டே நின்றார்கள். அடுத்த கணத்தில் தம் உயிரை முடிக்கப் போகும் அதை வேடிக்கை பார்த்தார்கள் என்றால் அந்தப் பிஞ்சு நெஞ்சம் எவ்வளவு மாசு மறுவற்றது என்பதை நினைத்துப் பார். புலவர்கள் போற்றும் ஒருவனுடைய குழந்தைகள் என்பதை மறந்தாலும், பேதைப் பிள்ளைகளின் இளம் பருவத்தையாவது நினைத்துப் பார். அந்தக் குழந்தைகளையா யானைக்குப் பலி யிடுவது?''

அரசன் பேச முற்பட்டான். குரல் எழும்பவில்லை. கனைத்துக் கொண்டான். புலவர் வருணித்த காட்சி அவன் மனத்தை உருக்கி விட்டது. அதோடு இந்தச் செயலால் புலவர்களின் சாபம் தனக்கு வரும் என்ற அச்சமும் உண்டாயிற்று.

மெல்ல வந்தது வார்த்தை. ''தங்கள் உபதேசப்படி நடக்கிறேன். என் பிழையைப் பொறுக்க வேண்டும்'' என்று கிள்ளி வளவன் கையைக் குவித்தான். உடனே உத்தரவு பறந்தது. கோவூர் கிழாரே மறுபடியும் ஓடினார், ''என் கண்மணிகளே!'' என்று அந்த இரண்டு குழந்தைகளையும் மார்போடு அணைத்துக்கொண்டார். அவருடைய இருதயம் அப்போது அடைந்த உவகையை அந்தக் குழந்தைகளால் அறிய முடியுமா?

ரேடியோ விமரிசனம்

மணி மலர்

18-3-56 மணி மலர் நிகழ்ச்சியில் கல்வியின் சிறப்புப் பற்றிய பாடல் நன்ருக இருந்தது. ஆனல் அதே பாடலை மூன்று முறைகள் பாடியது சலிப்பூட்டியது. அடுத்த நிகழ்ச்சி அறிவு வளர்ச்சிக்குரிய, பயனுள்ள நிகழ்ச்சி. இதன் மூலம் எலிபெண்டா குகையைப்பற்றிப் பல விஷயங்களையும் அறிந்துகொண்டோம். இந்தப் பகுதி ஒன்றுதான் இன்றைய மணி மலரில் சிறந்த அம்சம். பிறகு அடுத்தடுத்து பாடப்பட்ட மலைகளைப் பற்றிய பாடலும், பாரதியாரின் பாடலும் மிகவும் நன்ருக ரசிக்கத் தக்க முறையில், காதுக்கும் மனத்திற்கும் இனிமையாக இருந்தன. மூன்ருவதாகப் பாடிய பாடல் முன்னிரு பாட்டுகளைப்போல் அவ்வளவு நன்ருக இல்லை. நேரத்தைப் போக்குவதற்காகத்தான் இத்தனை பாடல்களைப் புகுத்தினர்கள் போலும்! இன்றைய மணி மலர் பாராட்டுவதற்குரிய முறையில் அமையவில்லை! —எஸ். முத்துரங்கன், மதுரை.

சிறுவர் நிகழ்ச்சி

25-3-56 ஞாயிறு அன்று திருவனந்தபுரம் சிறுவர் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ரேடியோ மாமா கூறிய 'ஜோசபின் கதை' மிகவும் உயரிய நீதியைப் போதிக்கின்றது. அக்கதையைக் கேட்ட சிறுவர் சிறுமியர், ''தாங்களும் வருங்காலத்தில் ஜோசபைப் போல மனத்திடமும், விடா முயற்சியும், நேர்மைப் பண்பும், இரக்க குணமும் உள்ளவர்களாக வாழவேண்டும்'' என்று உறுதி எடுத்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இனிமையாக இருந்தன.

இரண்டாவதாக மழலைமொழிக் குழந்தைகளால் பாடப்பட்ட ''பூஞ்சோலை, காலைக் காட்சி, வெண்பனி'' என்ற பாடல்கள் நன்ருக இருந்தன. ரேடியோ மாமா நாணய வரலாற்றைச் சிறிது விளக்கமாகக் கூறினர். நாணயங்களைப் பற்றி, இதற்குமுன் நான் அறியாத பற்பல விஷயங்களை அறிந்துகொண்டேன்.

கடைசியாக, சிவராமன் என்னும் சிறுவன் 'தவளை' என்ற வேடிக்கைக் கதை ஒன்று கூறினன். கதை பரவாயில்லை.. மொத்தத்தில் இந்த நிகழ்ச்சி நன்ருகவும் பயனுள்ளதாகவும், போற்றத்தக்க முறையிலும் அமைந்திருந்தது.

ஆனல்..? முழுமுறை மதியிலும் ஒரு சிறு களங்கம் இருக்கத்தானே செய்கிறது! அதுபோல இவ்வார நிகழ்ச்சியில் ஒரு நாடகம் இல்லாதுதான் பெருங்குறை.

—கே. எஸ். சக்கரவர்த்தி, பாளையங்கோட்டை.

சிறுவர் நிகழ்ச்சி

17-3-56 சென்னைச் சிறுவர் நிகழ்ச்சியில் வழக்கம்போல் ராஜாஜி நீதிக் கதை ஒன்றைக் கூறினர்! பின்பு, 'பாதாள நீரோடை' என்ற நாடகம் சிறுவர் சிறுமிகளால் சிறப்புற நடிக்கப்பட்டது. மெய்கண்டாணுகவும் அரசணுகவும் அமைச்சராகவும் அரசியாகவும் அரசிளங்குமாரியாகவும் நடித்தவர்களின் நடிப்பு பலே! பலே!

இந்த நாடகத்தைப் புனிதன் அவர்கள் இனிய வசனங்களால் இன்சுவைமிக்கதாக எழுதியுள்ளார். நன்றி. இந்த நாடகத்தில் நடித்த சிறுவர்களுக்கும் நன்றி.

—கே. ஹாரிஸ்பாபு, திருநெல்வேலி,

மணல் வீடு

பூவண்ணன்

கோடி கோடி பணத்தினல்
மாடி வீடு கட்டுவர்;
கோடி கோடி மணலினல்
வீடு நாங்கள் கட்டினேம்.
செங்கல் தேவை யில்லையே!
சிமிண்ட்டும் தேவை யில்லையே!
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவை யில்லையே!
ஐந்து நிமிட நேரத்தில்
அழகு மிக்க வீட்டினைச்
சந்து, பொந்து இன்றியே
துந்தி நாங்கள் கட்டினேம்.
கடலின் அலைகள் வீட்டினை
கரைத்திட் டாலும் பயமில்லை.
உடனே புதிய வீட்டினை
உவகை யோடு கட்டுவோம்.
ஏடு படிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினேம்!
வீடு உடைந்து போகுமுன்
ஓடி வந்து பாருங்கள்!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

நிருபர் பகுதி

8-3-56 மாலை திருவத்திபுரம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ... எஸ். எல். ஸி. வகுப்பு மாணவர்களுக்குப் பிரிவு உபசாரம் அளித்த ... தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. —வீரா. விநாயகம்.

திருப்பாதிரிப்புலியூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஹிந்திவாக் ...ர்த்தினி சபையின் நான்காவது ஆண்டு விழா 11-3-56-இல் ஜில்லா ...லெக்டர் அவர்கள் தலைமையில் நடந்தது. போட்டியில் வெற்றி பெற்ற ...ாணவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்களும் பரிசுகளும் வழங்கப் ...டன. —V. சந்திரசேகரன்.

10-3-56 அன்று துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளியின் ...க்கியக் கழகச் சிறப்புக் கூட்டம் புதுக்கோட்டை ஜட்ஜ் ...ஹராஜன் அவர்கள் தலைமையில் நடந்தது. கல்கி ஆசிரியர் ... சோமு, கோபிநாத் முதலானவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். —G. அருணாசலம்.

20-3-56 இவ்வூர் பேராண்மைக் கழகப் பள்ளியின் தமிழ் இலக்கிய ...ன்றத்தின் தொடக்க விழா துணை மேயர் ஸ்ரீமதி கிரேஸ் தக்கர் ...வர்கள் தலைமையில் நடைபெற்றது. மகாராணியார் பெண்கள் கல் ...ரித் தமிழ்ப் பேராசிரியை ஸ்ரீமதி நாகாம்பாள் சொற்பொழிவாற்றி ...ர்கள். —ஆர். துவாரகாநாத், பெங்களூர் ஸிடி.

பேனா நண்பர்கள்

1 அ. சிவசுப்பிரமணியன், C/o M. சொக்கலிங்க தேசிகர், 5-16 சன்னிதித் தெரு, திருப்பனந்தாள், தஞ்சை ஜில்லா.

2. ரா. அமிர்தம், உலகநாயகித் தெரு, கொத்தமங்கலம், ராமநாதபுரம் ஜில்லா.

3. ஏ. முனிசாமி, 'சாமி அகம்' 5, ஆவாரங்காட்டுத் தெரு, திருவண்ணாமலை. (வ. ஆ)

4. ஜி. சேதுராமன், 7-9, அரிசிக்கொளுவான் தெரு, சிவகாசி.

5. டி. ஆர். கணேசன், 8/667, மாரிநாய்க்கன் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

6. எஸ். சுப்பையா, 19, லட்சுமிபுரம் 5-வது தெரு, மதுரை.

7. மா. ரத்தினசாமி, வேலப்பர் கோவில் தெரு, கம்பம், மதுரை ஜில்லா.

8. என். சுந்தரம், C/o கே. ஆர். எஸ். மாணிக்கம் செட்டியார், 3, வலம்புரி ரோடு, வளையப்பட்டி.

9. அன்பு எழில், C/o அப்துல் ரஹமான், 14, குருநாகல் ரோடு, சிலாபம், இலங்கை.

10. பொ. செல்வராஜ், 359. அழுத்தமாவத்தை ரோடு, முகத்துவாரம், கொழும்பு-15.

(பெண்கள் மட்டும்)

1. என். எஸ். சந்திரிகா C/o ஏ. பாட்ரிக், 95/4 மே பீல்டு சந்து, கொழும்பு-13.

2. ந. செல்வராணி, 13, நாச்சிமார் கோயில் ரோடு, யாழ்ப்பாணம், இலங்கை.

3. கே. எஸ். லலிதா, C/o கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, 48, கே. ரோடு, ஜாம்ஷெட்பூர்.

(Regd. as Newspaper in Ceylon.) *Reg. No. M.*

கண்ணன் வெளியீடுகள்

அன்பார்ந்த சகோதரர்களே,
சகோதரிகளே! வணக்கம்.

உங்களுக்கு எல்லாம் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல விரும்புகிறோம். அதாவது கண்ணன் பத்திரிகை இருக்கிறதே, அந்தக் கண்ணன் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து நம் போன்ற சிறுவர் சிறுமியர் முதல் பதினைந்து பதினாறு வயது வரை ஆனவர்களுக்காக அருமை அருமையான புத்தகங்கள் வெளியிடுகிறார்கள். குறைந்த விலையில், அழகான படங்களோடு, அருமையான புத்தகங்கள் இருக்கின்றன. அறி வளர்ச்சிக்கும் ஆசைப் பொழுது போக்குக்கும் ஏற்றபடி பல புத்தகங்களைப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் அதையெல்லாம் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். இதுவரையில் வாங்காதவர்கள் உடனே வாங்கிப் படிக்கலாம். இதுவரையில் 24 புஸ்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல வரப்போகின்றன. ஆயினும் இப்போது கிடைக்க கூடியவை:

	ரு.	அ.
1. சந்திரகிரிக்கோட்டை-ஜனு	1	4
2. அசட்டுப் பிச்சு-ஆர்வி ..	1	0
3. சின்ன ராஜா-வாசகன் ..	0	12
4. ஜக்கு - ஆர்வி ..	0	8
5. ஜம்பு - ஆர்வி ..	0	8
6. விஞ்ஞானம் பேசுகிறார் பெ. நா. அ. ..	0	8
7. சமர்த்து மைனா - தி.ஜ.ர.	0	8
8. விளையும் பயிர் - கி.வா.ஜ.	0	8
9. மின்னல் அரக்கன் - ஜனு	0	8
10. ஏரிக்கரை மாளிகை-ஜனு	0	8

	ரு
11. குளிகைத் தீவு-ஆர்வி	.
12. மாஸ்டர் பாலகுமார்-ஆர்	
13. தூங்கும் அழகி - ஆர்வி	.
14. நீச்சல் பழக்கம்	.
15. கோழி விதைத்த நெல்	.
16. தங்கத்தின் பந்து	.

தயாராகின்றன :

1. லீடர் மணி
2. பாரஸீக ரோஜா
3. அபாயச் சங்கு

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு $12\frac{1}{2}\%$ கமிஷன் உ

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்